சாமர்த்தியக் கதைகள்

பேராசிரியர் எ. சோதி

சாமர்த்தியக் கதைகள்

பேராசிரியர் எ. சோதி
தமிழ்த்துறை
தாகூர் கலைக் கல்லூரி
புதுச்சேரி-605 008

நன்மொழிப் பதிப்பகம்
75, அரவிந்தர் வீதி
புதுச்சேரி-605 001

முதற் பதிப்பு: டிசம்பர் '89
இரண்டாம் பதிப்பு: சனவரி '91
மூன்றாம் பதிப்பு: டிசம்பர் '91
நான்காம் பதிப்பு: ஆகஸ்டு '92
ஐந்தாம் பதிப்பு: நவம்பர் '94

© உரிமை: பதிப்பகத்திற்கு

விலை: ரூ. 12.00

அச்சிட்டோர்:

சபாநாயகம் பிரிண்டர்ஸ்
கீழவீதி, சிதம்பரம்
போன்: 23040

என்னுரை

கெட்டிக்காரன் கதைகள் வரிசையில் 'கெட்டிக்காரன் கதைகள்', 'சாமர்த்தியக் கதைகள்', 'சாமர்த்தியக் கதைகள் II,' சாமர்த்தியக் கதைகள் III, 'சாமர்த்தியக் கதைகள் IV', 'சாமர்த்தியக் கதைகள் V', ஆகிய ஆறு நூல்கள் இதுவரை வெளிவந்து உள்ளன.

வாசகர்களாகிய உங்கள் பேராதரவினால் கெட்டிக் காரன் கதைகளை அடுத்து சாமர்த்தியக் கதைகள் என்ற இந்நூலும் ஐந்தாம் பதிப்பாக இப்பொழுது வெளிவருகிறது. இதை எண்ணி உண்மையிலேயே பெரிதும் மகிழ்கிறேன்.

கதை உலகம் வற்றாத சுரங்கம். இந்த வரிசையில் ஏறத்தாழ இருநூறு கதைகளைத் திரட்டித் தந்துள்ளேன். அனைத்துக் கதைகளுமே அறிவுக் கூர்மையின் பெருமையை உணர்த்தும் கதைகள். 'எந்தச் சூழலிலும் அறிவுடையவன் தப்பித்துக் கொள்வான்', 'அறிவுடையார் எல்லாம் உடை யார்' என்ற கருத்துகளை உணர்த்தும் கதைகள்.

இயன்ற அளவு இனிய எளிய நடையில் இந்தக் கதை களைத் தந்துள்ளேன்.

இந்நூலில் 32 கதைகள் உள்ளன. இந்தக் கதைகள் உங்கள் அறிவிற்கு விருந்தாகவும் பொழுது போக்கவும் பயன்படும் என்று கருதுகின்றேன்.

என் நூல்களின் எண்ணிக்கை ஐம்பதைக் கடந்து அறுபதை நெருங்குகின்றன. உங்கள் நல்லாதரவினால்தான் ஒன்பது ஆண்டுகளுக்குள் என்னால் இவ்வளவு நூல்களை எழுதிக் குவிக்க முடிந்தது.

இந்நூலுக்குச் சிறப்பாக மேலட்டை ஓவியம் வரைந்த ஓவியர் திரு. பத்மவாசன் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் நூல்கள் பற்றிய உங்களின் கருத்துகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நன்றி!

புதுச்சேரி–1 அன்பன்

06—10—94 எ. சோதி

உள்ளே

1. யார் கெட்டிக்காரர்? — 5
2. விதியின் முடிவு — 6
3. உதவி செய்தவர் — 8
4. சோதிடத்தில் வல்லமை பெற — 10
5. நினைப்பது ஒன்று! நடப்பது ஒன்று! — 12
6. ஒன்றும் தெரியாத மருமகள் — 16
7. இறந்த குதிரைக்கு விலையுண்டா? — 18
8. புண்படப் பேசாதே — 21
9. காணாமலே கண்டவன் — 23
10. எமனை ஏமாற்றிய சூதாடி — 26
11. எங்கள் வேலை இல்லை — 29
12. பிரிக்க முடியாதவர்கள் — 30
13. ஏமாந்தது யார்? — 34
14. உயிரைத் தரும் அன்பு — 36
15. அறிவிருந்தால் அழகிருக்குமா? — 39
16. உண்பதற்காகத் தந்திரம் — 41
17. பேரனைத் தண்டிக்காமல் தடுக்க — 45
18. விழித்தவர் தூங்கினார் — 47
19. யானையிடம் தப்பித்தவன் — 48
20. இறந்தான் என்று சொன்னால் சாவு — 50
21. வீரம் யாருக்கும் உண்டு! — 52
22. இரண்டு மனைவியைப் பெற்றவன் — 56
23. நான் எங்கு செல்வேன் — 57
24. தோசை காய்க்கும் மரம் — 59
25. இசையின் பெருமை — 62
26. எங்கும் அசைவதாயில்லை — 65
27. அரசன் அறைந்த அறை — 66
28. எட்டாத வானில் வீடு — 67
29. மருமகளை வெறுக்கும் மாமியார் — 69
30. அரசியல் அறிவு — 73
31. சொன்ன சொல் தவறாதவன் — 74
32. பேசினால் செல்வம் — 76

சாமர்த்தியக் கதைகள்

1. யார் கெட்டிக்காரர்?

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டின் மலைப் பகுதியில் வினோதமான நீரூற்று ஒன்று இருந்தது. கணவன் மனைவி இருவரில் யார் முதலில் அந்த ஊற்று நீரைக் குடிக்கின்றனரோ அவர் சொற் கேட்டு மற்றவர் வாழ்நாள் முழுமையும் நடப்பார்கள். அப்படிப்பட்ட ஆற்றல் அந்த நீருக்கு உண்டு.

இளைஞன் ஒருவனுக்குத் திருமணம் உறுதி ஆயிற்று. 'தன் பேச்சைக் கேட்டுத்தான் மனைவி நடக்க வேண்டும். அந்த ஊற்று நீரை முதலில் குடிப்பவன் நானாகத்தான் இருக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது?' என்று சிந்தித்தான் அவன்.

அருமையான திட்டம் அவன் உள்ளத்தில் தோன்றியது.

திருமண நாள், மணமகளின் கழுத்தில் தாலி கட்டினான். அங்கிருந்து ஒரே ஓட்டமாக அந்த நீரூற்று இருக்குமிடத்தை நோக்கி ஓடினான். நீரை அள்ளி அள்ளிக் குடித்தான். 'இனி அவள் என் பேச்சைக் கேட்டுத்தான் நடக்க வேண்டும்' என்ற மகிழ்ச்சியில் வீடு திரும்பினான்.

ஆனால் அவன்தான் வாழ்நாள் முழுமையும் மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டியது ஆயிற்று.

அறிவாளியான அந்தப் பெண், ஊற்று நீரை ஒரு பாத்திரத்தில் திருமணம் நிகழும் இடத்திற்கே கொண்டு வந்திருந்தாள். அவன் தாலி கட்டியவுடன் தான் வைத்திருந்த ஊற்று நீரை முதலில் குடித்தாள் அவள்.

2. விதியின் முடிவு

ஒரு சமயம், சப்பானிய நாட்டு அரசன் ஒருவன், தன்னைவிடப் பல மடங்கு படை வலிமை மிக்க நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்தான். எப்படியோ முயற்சி செய்து வீரர்களை திரட்டினான். எதிரி நாட்டு வீரர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு வீரர்கள் கூட அவனிடம் இல்லை.

வீரம் மிக்க அந்த அரசன் ஒரு நல்ல நாளில் தன் வீரர்களுடன் எதிரி நாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

ஆனால் அவன் வீரர்களோ, 'வெற்றியடைவது இருக்கட்டும். உயிருடனாவது திரும்புவோமா' என்று எதிரியின் படை வலிமையை எண்ணிக் கலங்கினார்கள்.

இதை அறிந்த அரசன், வீரர்களைப் பார்த்து, "போரில் வெற்றியோ தோல்வியோ நம் கையில் இல்லை. விதியின் கையில் இருக்கிறது. நாம் வணங்கும் புத்தரின் திருக்கோயில் இது. அவர் இந்தப் போரில் என்ன முடிவு இருக்கும் என்று சொல்கிறாரோ அதன்படிதான் நடக்கும். என் கையிலுள்ள இந்தப் பொற்காசைச் சுண்டிவிடுகிறேன். இதில் தலை விழுந்தால் நமக்கு வெற்றி. பூ விழுந்தால் எதிரிக்கு வெற்றி" என்று சொல்லிவிட்டுக் காசை வானத்தில் சுண்டி விட்டான்.

என்ன விழுந்துள்ளது என்பதைப் பார்க்க வந்த வீரர் களின் ஆரவாரம் வானைப் பிளந்தது. அவர்கள் வெற்றியைக் குறிக்கும் தலை விழுந்து இருந்தது.

எதிர்பார்த்தபடியே போரில் சப்பானிய அரசன் வெற்றி பெற்றான்.

"விதியின் முடிவல்லவா நம் நாட்டின் வெற்றி. எவ்வளவு வீரர்கள் இருந்தும் என்ன பயன்" என்றான் படைத்தலைவன்.

இதைக் கேட்ட அரசன், "நாம் நம் திறமையாலும் வீரத்தாலும் வெற்றி பெற்றுள்ளோம். விதி நமக்குச் சாதகமாக இருந்ததோ பாதகமாக இருந்ததோ யாருக்குத் தெரியும்?" என்றான்.

"அப்படியானால் பொற்காசில் நமக்குத் தலை விழுந்ததே" என்று கேட்டான் வீரன் ஒருவன்.

அரசன் தான் வைத்திருந்த பொற்காசை அவனிடம் தந்தான்.

அதன் இரண்டு பக்கமும் தலையே பொறிக்கப் பட்டிருந்தது. எல்லோரும் அந்தப் பொற்காசைப் பார்த்தனர்.

வியப்படைந்த அவர்களிடம், "நாம் வெற்றி பெறு வோம் என்று எனக்கு உறுதியாகத் தெரியும். ஆனால் உங்களில் சிலர் நம்பிக்கை இழந்து இருந்தீர்கள். அவர் களுக்கு ஊக்கம் அளிக்கவே இரண்டு பக்கமும் தலையே உள்ள இந்த நாணயத்தை வைத்து விதியின் முடிவு என்று சூழ்ச்சி செய்தேன்" என்று விளக்கினான் அரசன்.

3. உதவி செய்தவர்

மக்கள் நடமாட்டம் மிகுந்த அந்தத் தெரு வழியாக மூன்று சக்கர வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான் இளைஞன் ஒருவன். அதில் நிறைய முட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன.

ஒரு திருப்பத்தில் அந்த வண்டி கவிழ்ந்தது. அதில் இருந்த முட்டைகள் எல்லாம் கீழே விழுந்து உடைந்து போயிற்று.

"ஐயோ! முட்டை எல்லாம் வீணாகி விட்டதே! நான் இனி என்ன செய்வேன்?" என்று அழுது புலம்பினான் அவன்.

அங்கே பெரிய கூட்டம் கூடி விட்டது. எல்லோருக்குமே அழுது கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

அப்பொழுது சைக்கிளில் அங்கு பெரியவர் ஒருவர், "ஏன் அழுகிறாய்? உடைந்து போன முட்டைகளுக்கான தொகையை உன்னால் தர முடியாதா?" என்று அன்பாகக் கேட்டார்.

"ஐயா! நானோ ஏழை. என்னால் எப்படி இருநூறு ரூபாய் புரட்ட முடியும்?" என்று அழுதான் அவன்.

"கவலைப்படாதே! இந்தக் கூட்டத்தில் உனக்கு உதவி செய்யும் இரக்க குணம் உடையவர் பலர் உள்ளனர்" எனச் சொல்லிவிட்டுத் தன் தோளிலிருந்த துண்டைத் தரையில் விரித்தார். தன் பையிலிருந்த பத்து ரூபாயை எடுத்து அந்தத் துண்டில் போட்டார்.

அந்தக் கூட்டத்திலிருந்த பலரும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று அந்தத் துண்டில் போட்டனர். சிறிது நேரத்தில் நிறைய பணம் சேர்ந்து விட்டது.

பணத்தைப் பெரியவரே எண்ணினார். இருநூறு ரூபாய்க்கு மேல் இருந்தது.

அந்தத் தொகையை இளைஞனிடம் தந்த அவர். "இனியாவது கவனமாக நடந்து கொள்" என்று சொல்லி விட்டுச் சைக்கிளில் ஏறிச் சென்றார்.

கூட்டம் கலையத் தொடங்கியது. எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன், "தம்பி! அந்தப் பெரியவர் மட்டும் வரவில்லை என்றால் உன் கதி என்னவாகி இருக்கும்? என்ன நல்ல குணம் அவருக்கு?

முன்னமே அவரை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

அதற்கு இளைஞன், ''அவர்தாங்க என் முதலாளி. இந்த முட்டையை எல்லாம் ஏற்றி அனுப்பியவர்'' என்றான்.

4. சோதிடத்தில் வல்லமை பெற

ஓர் ஊரில் சோதிடத்தில் வல்லவரான ஒருவர் இருந்தார். தன் மகன் தன்னைப் போல் சோதிடத் திறமை பெறவில்லையே என்ற கவலை அவருக்கு இருந்தது.

அவர் மகனோ, ''அப்பா! என்னைப் பற்றி நீங்கள் மிகவும் குறைவாக எண்ணுகிறீர்கள். எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள். அப்பொழுதுதான் என் சோதிடத் திறமை உங்களுக்குத் தெரியும்'' என்றான்.

'தன் மகனுக்கு ஒரு வாய்ப்பு தருவது, அவன் எப்படி சோதிடம் பார்க்கிறான் என்று மறைந்து இருந்து கேட்பது' என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

அடுத்த நாள், பலத்த மழை பெய்து கொண்டு இருந்தது. இடியும் மின்னலும் பெருங்காற்றுமாக வீசிய அந்த நள்ளிரவில் சோதிடர் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

தன் மகனை எழுப்பிய அவர், ''யாரோ சோதிடம் பார்க்கத்தான் வந்திருக்கிறார்கள். விளக்கை எடுத்துச் செல். வந்தவரை நீயே பார்த்து அனுப்பிவிடு. நான் இங்கிருந்தபடி நீங்கள் பேசுவதைக் கேட்கிறேன்'' என்றார்.

மகன் விளக்கை எடுத்துக் கொண்டு சென்றான். சோதிடருக்குப் பேச்சுக் குரல் மட்டும் கேட்டது.

“நீங்க தென்மேற்குத் திசையிலிருந்து வர்ரீங்க சரிதானே” என்று கேட்டான் அவர் மகன்.

“ஆமாம்” என்றார் வந்தவர்.

“உங்க பேர் கருப்பன்தானே.”

“ஆமாம்.”

“உங்க மனைவிதானே சோதிடம் பார்க்க அனுப்பினார்கள்.”

“எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே” என்று சொன்னார் வந்தவர்.

பிறகு அவனிடம் நம்பிக்கையுடன் கேள்வி கேட்டார். அவனும் எல்லாவற்றிற்கும் நிறைவாகப் பதில் சொன்னான். பிறகு பணம் பெற்றுக் கொண்டு அவரை அனுப்பி வைத்தான்.

படுத்திருந்த தந்தையால் வியப்பை அடக்க முடியவில்லை.

மகன் உள்ளே வந்ததும் “எப்படி அவர் தென் மேற்குத் திசையிலிருந்து வந்ததாகச் சொன்னாய்?” என்று கேட்டார்.

“அப்பா! வந்தவரின் பின்பக்கத் தலைமுடி கலைந்து முன்பக்கம் விழுந்திருந்தது. பெருங்காற்று தென்மேற்குத் திசையில் இருந்து அடித்துக்கொண்டு இருந்தது. ஆகவே காற்றிற்கு அவர் பின்பக்கத்தைக் காட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆகவே தென்மேற்குத் திசை என்றேன்” என்று விளக்கினான் மகன்.

"சரி. வந்தவர் பெயர் கருப்பன் என்று எப்படிச் சொன்னாய்?" என்று கேட்டார்.

"விளக்கு வெளிச்சத்தில் அவர் எடுத்து வந்திருந்த குடையில் கருப்பன் என்று எழுதி இருந்தது. அதனால் சொன்னேன்" என்றான் மகன்.

"எல்லாம் சரி, அவர் மனைவி அனுப்பி சோதிடம் பார்க்க வந்ததாக எதனால் சொன்னாய்?" என்று கேட்டார் தந்தை.

"இடி, மழை, பெருங்காற்று வீசிய நள்ளிரவு நேரம் இது. இந்த நேரத்தில் ஒருவர் சோதிடம் பார்க்க வருகின்றார் என்றால் அது அவர் மனைவி அனுப்பி வந்ததாகத்தான் இருக்க வேண்டும். அதனால் அப்படிக் கூறினேன்." என்றான் மகன்.

எல்லாவற்றையும் கேட்டு மகிழ்ந்த தந்தை "நீ என்னைவிடப் பெரிய சோதிடனாகி விட்டாய்" என்று பாராட்டினார்.

5. நினைப்பது ஒன்று! நடப்பது ஒன்று!

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் அண்ணன் தம்பி இருவர் வாழ்ந்து வந்தனர். கொடுமைக்காரனான அண்ணன் பெரும் பணக்காரனாக இருந்தான் தம்பி ஏழையாக இருந்தான்.

காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வந்தால் சில நாட்கள் நிம்மதியாக வாழலாமே என்று நினைத்தான் தம்பி.

தயங்கித் தயங்கி அண்ணனிடம் சென்ற அவன். "அண்ணா! காட்டிற்குச் சென்று விறகு வெட்டப் போகிறேன். உன் குதிரைகளில் ஒன்றைக் கடனாகத் தந்தால் விறகுகளை அதன் மீது ஏற்றி வந்து விடுகிறேன்" என்று கெஞ்சினான்.

இதைக் கேட்டுக் கடுப்படைந்த அண்ணன், "இதுதான் முதலும் கடைசியுமாக உனக்குச் செய்யும் உதவி. குதிரையின் மீது அதிக பாரம் ஏற்றக் கூடாது. பொழுது மறைவதற்குள் குதிரை இங்கு வந்துவிட வேண்டும். அதற்கு ஏதாவது நிகழ்ந்ததென்றால் உன்னைத் தொலைத்து விடுவேன். நான்காவதாக நிற்கும் அந்தக் குதிரையை ஓட்டிச் செல்" என்றான்.

சிறிது தூரம் அந்தக் குதிரையை ஓட்டி வந்த பின்தான், சுமை வைக்கும் சிறிய வண்டியை அண்ணனிடம் கேட்க மறந்து விட்டோம் என்ற நினைவு அவனுக்கு வந்தது. மீண்டும் அண்ணனிடம் செல்லும் துணிவு அவனுக்கு இல்லை.

காட்டிற்குச் சென்ற அவன் தான் வெட்டிய விறகு களை ஒரு கட்டாகக் கட்டினான். தரையோடு அந்தக் கட்டை இழுத்து வருமாறு குதிரையின் வாலோடு கயிற்றால் இறுக முடிச்சுப் போட்டான், பிறகு தன் ஊர் நோக்கிக் குதிரையை ஓட்டிக்கொண்டு பயணமானான்.

வழியில் விறகுக் கட்டு ஒரு புதரில் நன்றாகச் சிக்கிக் கொண்டது. குதிரை இழுத்துப் பார்த்தது. அதனால் முடியவில்லை. நின்றுவிட்டது.

இதை அறியாத அவன் குதிரையை ஓங்கிச் சவுக்கால் அடித்தான். வலி பொறுக்க முடியாத குதிரை ஓட்டம் பிடித்தது, விறகுக் கட்டோடு கட்டப்பட்டிருந்த அதன் வால் முழுமையாக அறுந்து விட்டது.

நடந்ததை அறிந்த அவன் அண்ணனை நினைத்து நடுங்கினான். எப்படியோ குதிரையை ஓட்டிக்கொண்டு அண்ணனின் வீட்டை அடைந்தான்.

வால் அறுபட்ட குதிரையைக் கண்டதும் அண்ணனால் கோபத்தை அடக்க முடியவில்லை.

"உன்னை என்ன செய்கிறேன் பார். இப்பொழுதே என்னுடன் நீதிமன்றம் வா. உனக்குக் கடுந் தண்டனை வாங்கித் தருகிறேன்" என்று கத்திவிட்டு அவனை இழுத்துக் கொண்டு புறப்பட்டான்.

தம்பிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நீதிபதி எப்படியும் சிறைத் தண்டனை விதிப்பார். அண்ணனோ விடுவதாக இல்லை. சரி நாமே செத்து விடுவோம் என்ற எண்ணத்தில் அண்ணனிடம் இருந்து விடுபட்ட அவன் அங்கிருந்த பாலத்திலிருந்து ஆழமான ஆற்றில் குதித்தான்.

கீழே தந்தையும் மகனும் சென்று கொண்டிருந்த படகில் தந்தையின் மேல் விழுந்தான் அவன், அந்த அதிர்ச்சி தாங்காத கிழவன் அங்கேயே இறந்து விட்டான்.

"பாவி! என் தந்தையைக் கொன்றுவிட்டாயே? வா நீதிமன்றத்திற்கு" என்ற மகன் அவனை இழுத்துக் கொண்டு புறப்பட்டான்.

ஒரு பக்கம் தந்தையை இழந்த மகன், இன்னொரு பக்கம் அண்ணனும் அவனுடன் வந்தனர். தப்பிக்க வழி இல்லாத அவன் ஒரு பெரிய கல்லை எடுத்துத் தன் மேலாடைக்குள் மறைத்துக் கொண்டான்.

மூவரும் நீதிமன்றம் அடைந்தனர். தம்பி தன் மேலாடைக்குள் இருந்த பொருளை நீதிபதியிடம் காட்டி ஏதோ முணுமுணுத்தான்.

இதைக் கவனித்த நீதிபதி 'அவன் வைத்து இருப்பது ஒன்று தங்கமாக அல்லது வெள்ளியாக இருக்க வேண்டும். எப்படி இருந்தாலும் இன்று நமக்கு நல்ல வருவாய்தான். அவன் சார்பாகவே தீர்ப்பு வழங்க வேண்டும்' என்று முடிவு செய்தார்.

வழக்கை நன்கு விசாரித்த அவர் அண்ணனிடம் "உன் குதிரையின் வால் பழையபடி வளரும் வரை அது உன் தம்பிடமே இருக்கட்டும்" என்றார்.

தந்தையை இழந்த மகனிடம் "எப்படி உன் தந்தை கொல்லப்பட்டாரோ அதேபோல இவனை நீ கொல்லலாம். படகில் இவனை இருக்கச் செய்கிறேன். பாலத்திலிருந்து குதித்து இவனைக் கொன்றுவிடு" என்றார்.

இருவரும் பிள்ளையார் பிடிக்கக் குரங்காயிற்றே என்று வருந்தினார்கள்.

"தம்பி! நான் உனக்கு ஐம்பது பணம் தருகிறேன். குதிரையை எனக்குத் தந்துவிடு" என்றான் அண்ணன்.

பணத்தைப் பெற்றுக் கொண்டு குதிரையைத் தந்தான் தம்பி.

“ஐயா! என்னால் பாலத்திலிருந்து உங்கள் மீது குதிக்க இயலாது. அப்படி முயற்சி செய்தால் நானே இறந்து விடுவேன். இந்தாருங்கள் நூறு பணம். என்னை விட்டுவிடுங்கள்” என்று பணத்தைத் தந்தான் தந்தையை இழந்தவன்.

இருவரும் சென்றவுடன் நீதிபதி அவனைப் பார்த்து “எப்படி உன் சார்பாகத் தீர்ப்பு வழங்கினேன் பார்த்தாயா? மேலாடைக்குள் மறைத்து வைத்து இருப்பதைத் தந்துவிடு” என்றார்.

மேலாடையை விளக்கினான் அவன், உள்ளே ஒரு பெரிய கல் இருந்தது. “இதையா கேட்டீர்கள்?” என்று கேட்டான் தம்பி.

தான் நன்றாக ஏமாற்றப்பட்டதை உணர்ந்த நீதிபதியால் அதன் பிறகு ஒன்றும் செய்ய முடியவில்லை.

நூற்று ஐம்பது பணத்துடன் தன் ஊர் நோக்கி மகிழ்ச்சியாகப் பயணமானான் அவன்.

6. ஒன்றும் தெரியாத மருமகள்

ஓர் ஊரில் தாய் ஒருத்தி தன் மகனுக்குச் சீரும் சிறப்புமாகத் திருமணம் செய்து வைத்தாள். வீட்டிற்குப் புதிதாக வந்த மருமகளிடம் பெரிதும் அன்பு காட்டினாள்.

வந்த மருமகளுக்கோ நிலக்கடலை என்றால் உயிர். அந்த வீட்டிலிருந்த ஒரு மூட்டை நிலக்கடலையைச் சிறிது சிறிதாக எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

ஒரு மூட்டை சில மாதங்களுக்குள் அரை மூட்டை ஆகியது. மாமியாரும் அப்போதுதான் அதைக் கவனித்தாள்.

'என்ன மூட்டை பாதிதான் இருக்கிறது? யார் எடுத்திருப்பார்கள்? ஒருகால் நமக்குத் தெரியாமல் மருமகள்தான் தின்றே தீர்த்திருப்பாளோ? இன்றிலிருந்து அவள் நடவடிக்கையைக் கவனிப்பது' என்று முடிவு செய்தாள் அவள்.

தன்மீது சந்தேகப்படுகிறாள் மாமியார் என்பதை உணர்ந்தாள் மருமகள். அறிவுக் கூர்மையுடைய அவள் என்ன செய்வது என்று சிந்தித்தாள். ஒரு நாள், அவள் வீடு பெருக்கிக் கொண்டிருந்த பொழுது தரையில் கிடந்த நிலக்கடலையைக் கையில் எடுத்தாள். நேராக மாமியாரிடம் சென்றாள்.

"இதுவரை இதுபோன்ற விதையை நான் பார்த்தது இல்லை. இது என்ன விதை?" என்று நிலக்கடலையைக் காட்டிக் கேட்டாள்.

"இதுவா நிலக்கடலை. போய் உன் வேலையைப் பார்" என்று சொன்னாள் மாமியார். ஒன்றும் தெரியாத அப்பாவிப் பெண்ணாக இருக்கிறாளே! இவள்மீது வீணாகச் சந்தேகப் பட்டேனே? என்று வருந்தினாள்" அவள்.

7. இறந்த குதிரைக்கு விலையுண்டா?

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்குக் குதிரை ஓட்டுவது மிகப் பிடித்தமான பொழுதுபோக்கு. அரண்மனை லாயத்தில் பல வகையான குதிரைகள் இருந்தன.

தன் நாட்டிற்கு விருந்தினர் யார் வந்தாலும் அவர்களிடம் குதிரைகளைக் காட்டிப் பெருமை அடித்துக் கொள்வது அவன் வழக்கம்.

அந்த நாட்டிற்கு வந்த வெளிநாட்டு அரசனுக்குத் தன் குதிரைகளைக் காட்டினான். எல்லாவற்றையும் பார்த்த அரசன் ''உங்களிடம் உள்ளது போலப் பல வகையான அழகான குதிரைகள் இந்திரனிடம் கூட இருக்க முடியாது. ஆனால்'' என்று இழுத்தான்.

''என்ன ஆனால்! தயங்காமல் சொல்லுங்கள். எந்தக் குறையாக இருந்தாலும் தீர்க்கிறேன்'' என்றான் அரசன்.

''பஞ்ச கல்யாணிக் குதிரை மட்டும் இங்கு இருநதால் உங்கள் பெருமை உலகமெங்கும் மேலும் பரவும்'' என்றான் வந்த அரசன்.

''பஞ்ச கல்யாணிக் குதிரையா? நான் கேட்டதே இல்லையே'' என்று இழுத்தான் அரசன்.

''உலகிலேயே அந்த வகைக் குதிரைகள் ஒரு சிலதான் உள்ளன. அதன் வால் பொன்னிறமாக இருக்கும். உடல் வெள்ளைவெளேரென்று இருக்கும். நெற்றியில் இயல்

பாகவே அழகான பொட்டு அமைந்து இருக்கும். சிறிதுகூடக் களைப்பில்லாமல் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் ஓடும். அதன்மீது அமர்ந்து செல்வதே அழகாக இருக்கும்'' என்று வருணித்து விட்டுச் சென்றான் அந்த அரசன்.

அதைக் கேட்டவுடன் எப்படியாவது பஞ்ச கல்யாணிக் குதிரையைப் பெற வேண்டுமென்று முடிவு செய்தான் அவன்.

''யார் பஞ்ச கல்யாணிக் குதிரையை கொண்டு வருகின்றார்களோ அவருக்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப் படும்'' என்று நாடெங்கும் தெரிவித்தான் அவன்.

பஞ்ச கல்யாணிக் குதிரை என்று ஒன்று இருப்பதையே பலர் நம்பவில்லை. இரண்டு அல்லது மூன்று பேர்தான் அந்த முயற்சியில் இறங்கினார்கள்.

இதைக் கேள்விப்பட்ட அரசனுக்குக் குதிரை கிடைக்கும் என்ற நம்பிக்கையே இல்லை.

நாட்கள் ஓடின. பஞ்ச கல்யாணிக் குதிரையை அரசனிடம் தந்து பரிசு பெற ஒரு வீரன் வருகிறான் என்ற செய்தி அரசனின் காதில் தேனாக இனித்தது.

பஞ்ச கல்யாணிக் குதிரையைப் பார்க்கும் ஆவலில் அரசன் காத்திருந்தான். நம் நகரத்திற்குள் நுழையும் போது அந்தக் குதிரை இறந்துவிட்டது என்ற அதிர்ச்சி தரும் செய்தியை வீரன் ஒருவன் கொண்டு வந்தான்.

''மிக முயற்சி செய்து கொண்டுவந்த குதிரை இறந்து விட்டதே. இதற்கு அரசன் எப்படிப் பரிசு தருவான்?

நாமும் எப்படிப் பரிசு கேட்பது? நானும் என் குடும்பமும் மீண்டும் வறுமையில் வாட வேண்டியதுதானா? நான் வளம் பெறுவது ஆண்டவனுக்கே பொறுக்கவில்லை போலும்'' என்று அந்தக் குதிரையைக் கொண்டு வந்தவன் அதைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதான்.

அவ்வழியே வந்த அமைச்சன் ஒருவன் ''நாளை இந்தக் குதிரையை அரண்மனைக்குத் தூக்கிக் கொண்டு வா. உனக்குக் கிடைக்க வேண்டிய பரிசுத் தொகையை வாங்கித் தருகிறேன்'' என்றான்.

மறுநாள் அரசவைக்கு அந்த வீரனும் சிலரும் இறந்த குதிரையைத் தூக்கி வந்தனர்.

குதிரையின் அழகை அருகிலிருந்து பார்த்த அரசனுக்கு ''எவ்வளவு அழகான பஞ்ச கல்யாணிக் குதிரை. இது மட்டும் உயிருடன் இருந்தால்'' என்று நினைத்து ஏங்கினான்.

குதிரையைக் கொண்டு வந்தவன் ''அரசே! இந்தக் குதிரைக்குத் தாங்கள் தருவதாகச் சொன்ன பரிசைத் தந்துவிட்டால்'' என்று இழுத்தான்.

''என்ன இறந்து போன குதிரைக்குப் பரிசு கேட்கிறாயா? என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டான் அரசன்.

அருகிலிருந்து அமைச்சன் மெதுவாக, ''அரசே! கோபப் படாதீர்கள். பஞ்ச கல்யாணிக் குதிரை என்று ஒன்று இருப்பதாக இந்தக் குதிரை வரும் வரை யாரும்

நம்பவில்லை. நீங்கள் மட்டும் இதற்குச் சொன்னபடி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்தால், இறந்து போன குதிரைக்கே பரிசு என்றால் நாம் கொண்டுவரும் குதிரைக்கும் உறுதியாகப் பரிசு உண்டு என்று பலர் முயற்சியில் இறங்குவார்கள். உங்கள் எண்ணம் ஈடேறும், இந்த வீரனும் அரும்பாடு பட்டுத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறான். இறந்த குதிரைக்கு பரிசளித்தால் உங்கள் புகழ் உலகமெங்கும் பரவும்'' என்றான்.

அமைச்சன் சொன்னதை ஏற்ற அரசன் வீரனுக்குச் சொன்னபடிப் பரிசளித்தான். வீரனும் அமைச்சனை வாழ்த்தியபடி மகிழ்ச்சியுடன் தன் வீடு சென்றான்.

8. புண்படப் பேசாதே

முன்னொரு காலத்தில் சீன நாட்டில், 'என்எங்' என்ற அறிஞர் இருந்தார். நகைச்சுவை உணர்வும் புத்திக் கூர்மையும் கொண்ட அவர் சமயத்திற்கு ஏற்றபடிப் பேசவும் செய்வார். அவர் தோற்றத்தில் குள்ளமாக இருந்தார்.

ஒரு சமயம், சீன அரசர் அவரை அண்டை நாட்டிற்குத் தூதராக அனுப்பினார்.

அந்நாட்டரசன் பிறர் மனம் புண்படும்படிக் குத்தலாக பேசுவதில் விருப்பம் உடையவன். சீன நாட்டுத் தூதன் குள்ளமாக இருப்பதைக் கண்டு அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

"தூதனாக அனுப்ப உன்னைவிடச் சிறந்த ஆள் கிடைக்க வில்லையா? உன்னைப் போய் அனுப்பி உள்ளார்களே" என்று கேலியாகக் கேட்டான் அவன்.

குத்தலான பேச்சைக் கேட்ட என்னங்கிற்குக் கோபம் தலைக்கு ஏறியது. இருக்கும் சூழ்நிலையை அறிந்து அதை அடக்கி கொண்டார்.

"அரசே! எங்கள் நாட்டில் பெருமிதமான தோற்றம் உடையவர் எண்ணற்றவர் உள்ளனர். அவர்கள் உருவத்தைப் பார்த்தால் எல்லோரும் வியப்பு அடைந்து நிற்பார்கள். அவர்கள் எழுந்தால் அவர்களின் தலை கதிரவனை மறைக்கும் ஒரு அடி வைத்தால் ஒரு கல் தூரம் போவார்கள்" என்றார் என்னங்.

இதைக் கேட்ட அரசன் "அப்படிப்பட்டவர்கள் உங்கள் நாட்டில் இருப்பது உண்மையானால் உன்னைப் போன்ற ஒரு ஆளை ஏன் தூதனாக இங்கு அனுப்பி வைத்தார்கள்?" என்று கேட்டான்.

அவர் கேள்வியில் மிடுக்கும் தற்பெருமையும் கேலியும் இருப்பதை உணர்ந்தார் என்னங்.

"அரசே! எங்கள் நாட்டு மரபை ஒட்டித்தான் என்னை இங்கே அனுப்பி உள்ளார்கள்" என்றார் என்னங்.

"என்ன உங்கள் நாட்டு மரபு சொல்?" என்று குத்தலாய்க் கேட்டான் அரசன்.

"அரசே! ஒவ்வொரு நாட்டின் இயல்புக்கு ஏற்ப பொருத்தமான தூதர்களை அனுப்புவது எங்கள் நாட்டு வழக்கம். அறிவுள்ள அரசர் ஆளும் நாட்டிற்கு அறிவுள்ள

தூதர்களை அனுப்புவார்கள். முட்டாள்தனமான அரசர்கள் ஆளும் நாட்டிற்கு முட்டாளையே அனுப்புவார்கள். எங்கள் நாட்டிலேயே நான்தான் வடிகட்டிய பெரிய முட்டாள். என்னை இந்நாட்டிற்குத் தூதனாக அனுப்பி இருக்கிறார்கள்'' என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் அவமானத்தால் அரசனின் தலை கவிழ்ந்தது.

9. காணாமலே கண்டவன்

முன்னொரு காலத்தில் அரசன் ஒருவன் மாறு வேடத்தில் வயல் வழியாக வந்து கொண்டிருந்தான். அங்கே உழவன் ஒருவன் உழுது கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்து அரசன் ''எல்லாம் வல்ல இறைவன் உனக்கு நல்ல வலிமையும் நீண்ட ஆயுளும் தருவானாக'' என்று வாழ்த்தினான்.

''தாங்கள் என்மீது காட்டும் அன்பிற்கு நன்றி'' என்று சொன்னான் உழவன்.

''நிலத்திலிருந்து எவ்வளவு வருவாய் கிடைக்கிறது'' என்று வினவினான் அரசன்.

''மாதத்திற்கு நூறு வெள்ளிக் காசுகள் கிடைக்கும்'' என்றான் உழவன்.

''அவ்வளவு தொகையை என்ன செய்கிறாய்?'' என்று கேட்டான் அரசன்.

''ஐந்தில் ஒரு பங்கை அரசனுக்கு வரியாகச் செலுத்துகிறேன். இன்னொரு பங்கை நான் பட்ட கடனுக்கு

அடைக்கிறேன். மற்றொரு பங்கைக் கடனாகத் தருகிறேன். நான்காம் பங்கை வீசி எறிகிறேன். கடைசிப் பங்கை எனக்காகச் செலவழிக்கிறேன்'' என்று புதிராகப் பேசினான் உழவன்.

அரசனுக்கு ஒனறும் புரியவில்லை. தன் மாறு வேடத்தைக் கலைத்தான். இவ்வளவு நேரம் தன்னுடன் பேசியது அரசர் என்பதை அறிந்த உழவன் பணிவாக வணங்கினான்.

அவனைப் பார்த்து அரசன், 'நீ சொன்ன ஐந்து பங்கில் வரியாகத் தருவதும் உனக்காகச் செலவழிப்பதும் தான் எனக்குப் புரிந்தது. மற்றவற்றின் பொருள் என்ன?'' என்று கேட்டான்.

''அரசே! ஒரு பங்கை என் பெற்றோர்க்குச் செலவு செய்கிறேன். என்னை வளர்த்து இந்நிலைக்கு ஆளாக்கி யவர்கள் அவர்கள். அவர்களுக்கு செலவு செய்வதைக் கடனுக்கு அடைக்கிறேன் என்றேன். இன்னொரு பங்கை என் மகனுக்குச் செலவு செய்கிறேன். பிற்காலத்தில் என்னைக் காப்பாற்ற போகிறவன் அவன். அதனால் அதைக் கடனாகத் தருகிறேன் என்றேன். நான்காம் பங்கை என் மகளுக்குச் செலவு செய்கிறேன். எப்படி இருந்தாலும் திருமணமாகி இன்னொருவன் வீட்டில் வாழ வேண்டியவள். அதனால் அந்தச் செலவை வீணாகத் தெருவில் எறிகிறேன் என்றேன்'' என்று விளக்கம் தந்தான் உழவன்.

மகிழ்ந்த அரசன், ''உன் அறிவுக்கூர்மை மிக நன்றாக உள்ளது. இந்த விளக்கத்தை என்னைப் பாராமல் நீ

யாரிடமும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் உன் உடலில் உயிர் தங்காது'' என்று சொன்னான்.

அரண்மனை திரும்பிய அரசன் தான் கேட்ட புதிரை எல்லோரிடமும் சொல்லி அதற்கு விளக்கம் கேட்டான்.

யாராலும் அதற்கு விளக்கம் தர முடியவில்லை.

"யார் விளக்கம் தந்தாலும் அவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு'' என்றான் அரசன்.

அரசனுக்கு இந்தப் புதிர் எங்கு கிடைத்திருக்கும் என்பதை அறிந்தான் அமைச்சன் ஒருவன். நேராக உழவனிடன் சென்றான் அவன்.

"அரசு நாணயச் சாலையில் புத்தம் புதிதாக அச்சடித்த இந்த ஐந்நூறு பொற்காசுகளைப் பெற்றுக் கொள். அரசனிடம் சொன்ன விளக்கத்தை என்னிடம் சொல்'' என்றான்அவன்.

பளபளக்கும் பொற்காசுகளைக் கண்ட உழவன், 'அரசனை எப்படியும் சமாளித்துக் கொள்ளலாம்' என்று நினைத்தான். விளக்கத்தைக் கூறிப் பொற்காசுகளை மகிழ்ச்சியுடன் பெற்றான் அவன்.

அரண்மனை திரும்பிய அமைச்சன் நேராக அரசனிடம் சென்று புதிருக்கான விளக்கத்தைச் சொன்னான்,

உழவன்தான் சொல்லி இருக்கிறான் என்பதை அறிந்தான் அரசன். அவனை இழுத்து வருமாறு ஆணையிட்டான்.

இழுத்து வரப்பட்ட உழவனைப் பார்த்து, "உனக்கு என்ன ஆணவம்? என்னைக் காணாமல் யாரிடமும்

சொல்லக் கூடாது. உன் உயிர் போய் விடும் என்ற என் கட்டளையை மீறிச் சொல்லி இருக்கிறாய் உன் உயிரை இப்பொழுது யார் காப்பாற்றுகிறார் பார்ப்போம்?'' என்று கோபத்துடன் கத்தினான் அரசன்.

''அரசே! நான் சொல்வதைக் கேளுங்கள். என் மீது எந்தத் தவறும் இல்லை'' என்று பணிவாகச் சொன்னான் உழவன்.

''என்னைப் பார்க்காமல் யாரிடமும் சொல்லக் கூடாது என்றேனா இல்லையா?'' என்று கத்தினான் அரசன்.

அமைச்சன் கொடுத்த பொற்காசுகளை அரசனிடம் காட்டிய உழவன், ''இதில் ஒவ்வொரு பக்கமும் தங்கள் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதைப் பார்த்துத்தான் அமைச்சரிடம் சொன்னேன். ஆகவே தங்களை வைத்துக் கொண்டுதான் நான் விளக்கம் தந்தேன். தங்கள் வாக்கை நான் எந்த வகையிலும் மீறவில்லை'' என்று சாதுர்மாக விளக்கினான் உழவன்.

உழவனின் அறிவுக் கூர்மையை மெச்சிய அரசன் அவனுக்குப் பரிசுகள் தந்து அனுப்பி வைத்தான்.

10. எமனை ஏமாற்றிய சூதாடி

சூதாடி ஒருவன் இறந்து போனான். அவனுடைய உயிரை எம தூதர்கள் எமனுடைய அவைக்கு இழுத்து வந்தனர்.

அரியணையில் அமர்ந்திருந்த எமன், ''சித்திரகுப்தா! இவன் செய்த புண்ணியம் என்ன? பாவம் என்ன? படி பார்ப்போம்'' என்றான்.

''இவன் கணக்கில் உள்ள ஒரே புண்ணியச் செயல் துறவி ஒருவர்க்கு மனமகிழ்ச்சியுடன் ஒரு காசைத் தந்ததுதான். அதன் பயனாக இவன் ஒரு நாள் மட்டும் இந்திரனாக இருக்க வேண்டும். மற்றவை எல்லாம் பாவந்தான். அதற்காகப் பல நூறு ஆண்டுகள் இவன் நரகத்தில் துன்பப்பட வேண்டும்'' என்று படித்தான் சித்திரகுப்தன்.

சூதாடியைப் பார்த்து எமன், ''நீ முதலில் ஒரே ஒரு நாள் மட்டும் இந்திரனாக இருக்கிறாயா? அல்லது நரகத் துன்பத்தை நுகர்ந்த பின் இந்திரன் ஆகிறாயா? தேர்ந் தெடுக்க வேண்டியது உன் பொறுப்பு'' என்றான்.

''நான் முதலில் ஒருநாள் மட்டும் இந்திரனாக இருக்கிறேன்'' என்றான் சூதாடி.

மறுநாளே சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லப் பட்ட அவன் அங்கு முடி சூட்டப் பட்டான்.

இந்திரனின் அரியணையில் அமாந்த அவன், பூவுலகில் உள்ள தன் நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் இங்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

கண் இமைக்கும் நேரத்திற்குள் அவர்கள் அனைவரையும் கொண்டுவந்து சேர்த்தனர் தேவர்கள்.

''நாங்கள் எல்லோரும் மூவுலகிலும் உள்ள புண்ணிய நதிகள் அனைத்திலும் நீராட வேண்டும். எங்கள் பாவம்

தொலைய வேண்டும். அற்தகு வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்'' என்று தேவர்களுக்குக் கட்டளையிட்டான் அவன்.

புதிய இந்திரனின் கட்டளையை ஏற்ற அவர்கள் அவன் கட்டளையைச் சில மணி நேரத்தில் செய்து முடித்தனர்.

தான் அரியணையை விட்டு இறங்க இன்னும் சில மணி நேரம் இருப்பதை உணர்ந்த அவன் ''என் பெயரால் இதுவரை யாருமே செய்திராத அளவு விரிவாகத் தான தருமங்களைச் செய்யுங்கள்'' என்று கட்டளை இட்டான்.

தேவர்களும் அப்படியே செய்து முடித்தனர்.

மாலை நேரம் வந்தது.

''நீங்கள் புண்ணிய நதிகளில் நீராடியதாலும் தான தருமங்கள் செய்ததாலும் உங்கள் பாவம் அனைத்தும் நீங்கி விட்டது. இனி நீள்கள் இந்திரனாக நிலையாக இங்கேயே தங்கி இருக்கலாம்'' என்று அறிவித்தனர் தேவர்கள்.

பொழுது விடிந்தது. எமனிடம் வந்த சித்திரகுப்தன் அந்தச் சூதாடி இந்திரனாகவே நிலையாகத் தங்கி விட்டான் என்று நடந்ததைச் சொன்னான்.

''ஐயோ! அந்தச் சூதாடி என்னை ஏமாற்றி விட்டானே'' என்று அலறினான் எமன்.

11. எங்கள் வேலை இல்லை

பெரிய பணக்காரர் ஒருவர் எங்கு சென்றாலும் பல்லக்கில்தான் செல்வார். பல்லக்கைத் தூக்கிச் செல்வ தற்காக நான்கு வேலையாட்களைச் சம்பளத்திற்கு அமர்த்தி இருந்தார்.

ஒரு சமயம். அவர் வீட்டுத் தோட்டத்தில் கட்டப் பட்டு இருந்த கன்றுக்குட்டி காணாமல் போல் விட்டது.

பல்லக்குத் தூக்கிகளை அழைத்த அவர், காணாமல் போன கன்றுக்குட்டியை 'நீங்கள் நால்வரும் ஊர் முழுவதும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்' என்றார்.

பண்ணையார் பெரிய வேலையை வைத்துவிட்டாரே என்று நினைத்த அவர்களில் ஒருவன், "ஐயா! எங்கள் வேலை பல்லக்குத் தூக்குவதுதான், அதற்குத்தான் ஊதியம் வாங்குகிறோம். கன்றுக்குட்டியைத் தேடுவது எங்கள் வேலை இல்லை" என்றான்.

மற்றவர்களும் இதையே சொன்னார்கள்.

"பல்லக்குத் தூக்குவதுதானே உங்கள் வேலை" என்ற பண்ணையார், "நானே காணாமல் போன கன்றுக் குட்டியைத் தேடிக் கண்டுபிடிக்கிறேன். பல்லக்குத் தயாராகட்டும்" என்றார்.

பல்லக்கில் அமர்ந்த அவர், "இரண்டு கல் தொலைவிலுள்ள அந்த குன்றுக்குத் தூக்கிச் செல்லுங்கள். அங்குதான் கன்றுக்குட்டி இருக்கும்" என்றார்.

முச்சிறைக்க நால்வரும் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு அங்கே சென்றனர். காடு, மலை, மேடு எல்லா இடங்களிலும் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு அலைய வைத்தார்.

சிறிதுகூட நடக்க முடியாத நிலை நால்வருக்கும் ஏற்பட்டது.

பல்லக்கை இறக்கி வைத்த அவர்கள் "எங்கள் அறியாமையால் உங்களை எதிர்த்துப் பேசி விட்டோம். நீங்கள் வீட்டில் இருங்கள். எங்கிருந்தாலும் கன்றுக் குட்டியைத் தேடிக் கண்டுபிடித்து வருகிறோம்" என்று பணிவுடன் சொன்னார்கள்.

மேலும் அவர்களைக் கொடுமைப்படுத்தக் கூடாது என்று நினைத்த அவரும், "சரி" என்றார்.

அன்று மாலைக்குள் கன்றுக்குட்டியுடன் திரும்பினார்கள் அவர்கள்.

12 பிரிக்க முடியாதவர்கள்

ஓர் ஊரில் குடும்பம் ஒன்று இருந்தது. கணவன் மனைவி இருவருமே ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தனர்.

ஊர் மக்கள் எல்லோரும் 'கணவன் மனைவி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். யாராலும் பிரிக்க முடியாது' என்று அவர்களின் ஒற்றுமையைப் பற்றிப் பெருமையாகப் பேசினார்கள்.

தன் நண்பனுடன் வெளியூரிலிருந்து அங்கு வந்தான் ஒருவன்.

“என் அறிவுக் கூர்மையினால் எந்தச் செயலையும் செய்ய முடியும்” என்று பெருமையாகச் சொன்னான் நண்பன்.

உடனே அவன் “உன்னால் முடியாத செயலும் உண்டு. நான் ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டுகிறேன். ஒற்றுமையாக இருக்கும் அந்தக் கணவன் மனைவியை நீ இன்னும் ஒரு வாரத்திற்குள் சண்டை போட்டுக் கொள்ள வைக்க வேண்டும். இல்லாவிட்டால் தோற்றதாக ஒப்புக் கொண்டு எனக்கு ஆயிரம் ரூபாய் தர வேண்டும்” என்றான்.

“உன் பந்தயத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதற்கு ஒரு வாரமே தேவையில்லை. அவர்கள் இருவரும் சண்டையிட்டுக். கொள்வதை நீ மட்டு மென்ன இந்த ஊராரே பார்க்கப் போகிறார்கள். எனக்குத் தர வேண்டிய ரூபாயை இப்பொழுதே தயார் செய்” என்றான் நண்பன்.

மறுநாள் அந்த நண்பன் நரைத்த தாடி மீசையுடன் முதியவரைப் போல் வேடாம் பூண்டான்.

நண்பகல் நேரம். அவளின் கணவன் வேலை செய்து கொண்டிருந்த வயலுக்குத் தள்ளாடித் தள்ளாடி வந்து சேர்ந்தான் நண்பன்.

பெரியவரைக் கண்ட உழவன் அவரை வரவேற்றான். உழவனுடன் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தார் பெரியவர்.

அப்பொழுது உழவனின் மனைவி அங்கு வந்தாள் சிறிது நேரம் அங்குத் தங்கியிருந்து இருவருக்கும் உணவு அளித்துவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டாள் அவள்.

அவள் சென்றவுடன் பெரியவர், "நீங்கள் இருவரும் மனமொத்து வாழ்கிறீர்கள். உன்னை நினைத்தால் எனக்குப் பாவமாக உள்ளது. எதற்கு உண்மையைச் சொல்லி உங்கள் மன அமைதியைக் கெடுப்பானேன்" என்று இழுத்தார்.

ஆர்வத்தை அடக்க முடியாத உழவன், "ஐயா! என்ன இருந்தாலும் தயங்காமல் சொல்லுங்கள்" என்றான்.

"நான் சொல்வதை நீ நம்ப வேண்டும் என்பது இல்லை. நீயே சோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். உன் மனைவி போன பிறவியில் நாயாக இருந்திருக்கிறாள். இன்னும் நாய்ப் பண்பு அவளை விட்டுப் போகவில்லை. இன்றிரவு நீ தூங்காமல் விழித்திரு. அவள் உன் உள்ளங் கையைத் தன் நாக்கினால் நக்குவாள். அப்பொழுது நீ தூ! நாயே! என்று சொல். இதிலிருந்து அவள் நாய்ப் பண்புடையவள் என்று நீயே அறிந்து கொள்ளலாம்" என்று சொல்லி விடைபெற்றார் அவர்.

நேராக உழவனின் வீட்டிற்கு வந்தார் அவர். தன் கணவருடன் பேசிக் கொண்டிருந்தவர் என்பதால் வரவேற்றாள் அந்தப் பெண்.

"அம்மணி! உன்னைப் பார்த்தால் திருமகள் போல் இருக்கிறாய். உனக்கு இப்படி வாழ்க்கை அமைந்து

விட்டதே என்று நினைத்து என் மனம் தாங்கவில்லை, அதனால் இங்கு வந்தேன். உண்மையைச் சொல்லி உன் மனதைக் கெடுப்பானேன்'' என்று இழுத்தார் பெரியவர்.

''ஐயா! எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள்'' என்று வேண்டினாள் அவள்.

''அம்மா! போன பிறவியில் உன் கணவன் உப்புக் குறவனாக இருந்திக்கிறான். இன்றிரவு அவன் உறங்கிய வுடன் அவன் உள்ளங்கையை நாவினால் நக்கிப் பார். உப்புக் கரிக்கும். அது மட்டும் அல்லாமல் தூக்கக். கலக்கத்தில் 'நாயே' என்று பிதற்றுவான். இதில் இருந்து அவன் இன்னும் உப்புக் குறவனாகத்தான் இருக்கிறான் என்று நீ அறிந்து கொள்ளலாம்'' என்று சொல்லி விட்டுப் போனார் அவர்.

அன்றிரவு உழவன் தூங்குவது போல் நடித்தான். தன் கணவன் தூங்கி விட்டான் என்று நினைத்தாள் அவள். உண்மையை அறிய அவன் உள்ளங்கையை நக்கிப் பார்த்தாள்.

பெரியவர் சொன்னது உண்மைதான். தன் மனைவி நாயாகத்தான் இருக்கிறாள் என்று நினைத்த அவன் 'தூ! நாயே' என்று கையை உதறினான்.

இதைக் கேட்டவுடன் 'தன் கணவன் உப்புக் குறவன்தான். இதை அறியாமல் திருமணம் செய்து கொண்டோமே' என்று வருந்தினாள் அவள்.

''சும்மா இரு. உப்புக் குறவா'' என்று பதிலுக்கு அதட்டினாள் அவள்.

'இவள் நாயாக இருந்துகொண்டு உப்புக் குறவன் என்று தன்னைக் குற்றம் சாட்டுகிறாளே' என்று கோபம் கொண்டான் அவன்.

''நீதான் நாய். இன்னும் நாக்காலே நக்குகிற புத்தி. உன்னைவிட்டுப் போகவில்லை'' என்று கத்தினான் அவன்.

''நீதான் உப்புக் குறவன். உண்மை தெரிந்துவிட்டது என்று என்னை நாய் என்று திட்டுகிறாயா? இனிமேல் ஒரு குறவனோடு என்னால் வாழ இயலாது'' என்று கத்தினாள் அவள்.

''என்னால் மட்டும் ஒரு நாயோடு குடும்பம் நடத்த இயலுமா?'' என்று பதிலுக்கு கத்தினான் அவன்.

பொழுது புலர்ந்தது. ஊராருக்கு ஒரே வியப்பு. ஒற்றுமையான கணவன் மனைவி ஏன் இப்படித் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள இயலவில்லை. அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்தும் அவர்களைச் சமாதானம் செய்ய இயலவில்லை.

இவர்களைப் பிரிப்பதாகச் சொன்னவன் ஆயிரம் ரூபாய்ப் பரிசுடன் தன் ஊர் திரும்பினான்.

---

13. ஏமாந்தது யார்?

ஓர் ஊரில் செல்வர் ஒருவர் இருந்தார். அவருக்கு வேலைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் சமையல் அறைக்குள் நுழைந்து இருப்பதை எல்லாம் தின்று விடுவான்,

சந்தைக்குப் போன செல்வர் தான் உண்பதற்காகப் பாத்திரம் நிறைய கட்டித் தயிர் வாங்கி வந்தார்.

'கொண்டு வருவது தயிர் என்று தெரிந்தால் வேலைக்காரன் எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுவான் என்ன செய்வது' என்று சிந்தித்துக் கொண்டே வந்தார் செல்வர்.

வீட்டிற்குள் நுழைந்ததும், ''ஐயா! பாத்திரத்தில் என்ன வாங்கி வந்திருக்கிறீர்கள்?'' என வினவினான் வேலைக்காரன்.

''வெள்ளைச் சுண்ணாம்பு. இதைச் சாப்பிட்டால் வயிறெல்லாம் எரிந்து உடனே உயிர் போய்விடும். நீ எக்காரணத்தைக் கொண்டும் இதைத் தொடாதே. போய் இன்று முழுவதும் தோட்டத்தை உழுதுவிட்டு வா'' என்றார் செல்வர்.

வேலைக்காரனுக்குப் பாத்திரத்திற்குள் இருப்பது கட்டித் தயிர்தான் என்பதை அறை முழுமையும் பரவிய மணம் சொல்லியது.

''வெற்றிலை பாக்குப் போட அதிலிருந்து கொஞ்சம் சுண்ணாம்பு கொடுங்க'' என்று கேட்டான் அவன்.

''வேலையை முடித்துவிட்டு வா. அதிலிருந்து கொஞ்சம் தருகிறேன்'' என்றார் செல்வர்.

மாடுகளை ஓட்டிக்கொண்டு சென்ற வேலைக்காரன் சிறிது நேரத்திற்குள் வீட்டிற்கு வந்தான். ''என்னடா, நான் சொன்ன வேலைகளை எல்லாம் முடித்து விட்டாயா?'' என்று கேட்டார்.

“ஐயா, என்னால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. ஒரு மாட்டைக் கட்டினால், இன்னொரு மாடு அறுத்துக்கொண்டு ஓடுகிறது. இதில் நான் எப்படி தோட்டத்தை உழ முடியும்?” என்றான் வேலைக்காரன்.

பொறுமை இழந்த செல்வர், “என்னடா வேலை செய்யச் சொன்னால் விளையாட்டு காட்டுகிறாயா?” என்று சொல்லிவிட்டு அவன் முதுகில் ஓங்கி அறைந்தார்.

அவ்வளவுதான் அந்த வேலைக்காரன், ஐயா! என்னை நீங்கள் அடித்து விட்டீர்கள். இனி நான் உயிர் வாழ மாட்டேன். இப்பொழுதே அந்தச் சுண்ணாம்பைக்குடித்து உயிரை விட்டு விடுகிறேன்” என்று சொல்லிவிட்டு சமையலறைக்குள் வேகமாகச் சென்றான்.

“டேய், குடிக்காதேடா” என்று முதலாளி கத்திக் கொண்டே வந்தார். அதற்குள் கட்டித் தயிர் முழுவதையும் குடித்து முடித்தான் அந்தக் கெட்டிக்கார வேலைக்காரன்.

என்ன செய்வது வேலைக்காரனின் சூழ்ச்சி செல்வருக்குப் பிறகுதான் புரிந்தது.

14. உயிரைக் தரும் அன்பு

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் நேர்மையுடன் ஆண்டு வந்தான், அவனுக்கு ஒரே மகன்; அவன் அறிவிலும் அழகிலும் வீரத்திலும் ஈடு இணையற்றவனாக விளங்கினான்.

அவனை மணம் செய்து கொள்ளப் பல நாட்டு இளவரசிகளும் போட்டி போட்டனர்.

அரசனும் அரசியும் தம் மகனுக்கு ஏற்ற மனைவி எந்த நாட்டு இளவரசி என்று சிந்தித்தனர். ஐந்து பேர் அவர்கள் நினைவுக்கு வந்தனர்.

"அந்த ஐந்து இளவரசிகளையும் நம்நாட்டுக்கு வரவழைப்போம். நம் மகனுக்கு அவர்களில் யாரைப் பிடிக்கிறதோ அவளைத் திருமணம் செய்து வைப்போம்" என்றாள் அரசி.

அரசனும் இதற்கு ஒப்புக் கொண்டான். உடனே ஐந்து நாட்டு இளவரசிகளும் கோலாகலமாக அந்நாட்டிற்கு வரவழைக்கப் பட்டனர்.

ஐவரையும் பார்த்துத் திரும்பிய இளவரசன், "அம்மா! ஐவருமே ஈடு இணையற்ற அழகிகளாக எனக்குத் தெரிகின்றனர். என்னால் அவர்களுள் சிறந்தவளைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. நீங்கள் யாரைச் சொல்கின்றீர்களோ அவளையே திருமணம் செய்து கொள்கிறேன்" என்றான்.

அரசிக்கு அவர்களில் யாரைத் தன் மகனுக்கு திருமணம் செய்வது என்று புரியவில்லை.

நாட்கள் ஓடின, திடீரென்று அந்த நாட்டு மக்களைக் கொடிய வியாதி ஒன்று தாக்கத் தொடங்கியது. நாள் தோறும் நூற்றுக்கணக்கானவர் இறக்கின்றனர் என்ற செய்தி அரண்மனைக்கு வந்த வண்ணம் இருந்தது.

ஒருநாள் மாலை நேரம் இளவரசிகள் தங்கி இருந்த அறைக்கு அழுது கொண்டே ஓடி வந்தாள் அரசி.

"இளவரசனைக் காப்பாற்றுவது உங்கள் கையில்தான் உள்ளது. நாட்டு மக்களைப் பலி வாங்கிய அந்தக் கொடிய நோய், இப்பொழுது இளவரசனையும் தாக்கியுள்ளது. மருத்துவர்கள் நாளைக் காலை வரை அவன் உயிருக்குக் கெடு வைத்துள்ளனர். உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பு குறைவு. இருந்தாலும், யாரேனும் ஒரு பெண் அவன் உடலைத் தழுவிக் கொண்டு தன் மூச்சுத் காற்றை அவன் முகத்தில் ஊதி ஊதி வெப்பமூட்ட வேண்டும். அப்படிச் செய்தால் இளவரசன் பிழைத்தாலும் பிழைக் கலாம். மாறாக அவனைப் பிடித்த கொடிய நோய், அவளையும் பிடித்து இறந்துவிடக் கூடும் என்று சொல் கிறார்கள். உங்களில் யாரேனும் ஒருவர் தன் உயிரைப் பணயம் வைத்து இளவரசனைக் காப்பாற்றுங்கள்" என்று வேண்டினாள்.

"இளவரசனோடு மகிழ்ச்சியாக வாழலாம் என்று வந்தால் எங்கள் வாழ்வுக்கே உலை வைக்கின்றீர்களே. நாங்கள் இன்றே எங்கள் நாட்டுக்குச் செல்கிறோம்" என்று சொல்லிவிட்டு நான்கு இளவரசிகளும் புறப்பட்டனர்

ஒரே ஒருத்தி மட்டும் அரசியை வணங்கி, "அவரைத்தான் என் கணவராக எண்ணியுள்ளேன். என் வாழ்வும் தாழ்வும் அவருடன்தான். அவர் எங்கே இருக்கிறார். என்று சொல்லுங்கள், விதி எப்படி உள்ளதோ அப்படியே நடக்கட்டும். என்னை அவர்

இருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று அழுதுகொண்டே சொன்னாள்.

இதைக் கேட்டதும் அரசி அவளைக் கட்டித் தழுவிக் கொண்டாள். ''அழாதே! என் மருமகளான இந்நாட்டு இளவரசியின் கண்களிலிருந்து கண்ணீர் வர வேண்டாம். இந்த நாட்டை எந்தக் கொடிய நோயும் தாக்கவில்லை. மக்கள் இறந்ததாக வந்த செய்தி அனைத்தும் பொய். இளவரசன் எப்பொழுதும் போல் நன்றாகவே உள்ளான். அவனுக்கு ஏற்ற மனைவி யார் என்று தேர்ந்தெடுக்க நாங்கள் போட்ட நாடகமே இது'' என்றாள் அரசி.

15. அறிவிருந்தால் அழகிருக்குமா?

முன்னொரு காலத்தில் தால்மட் நாட்டில் ஜோசுவா என்ற அறிஞர் இருந்தார். அவருடைய தேர்ந்த கல்வியும் அறிவுக் கூர்மையும் பல நாடுகளில் அவர் புகழ் பரவக் காரணமாயிற்று. ஆனால் அவர் பார்ப்பதற்கு அவலட்சணமான தோற்றம் உடையவராக இருந்தார்.

ஒருமுறை ஜோசுவா அரசவைக்கு வந்தார். அங்கிருந்த இளவரசி முதன் முதலாக அப்பொழுது தான் அவரைப் பார்த்தாள்.

''எவ்வளவு அருமையான அறிவு. இப்படிப்பட்ட அவலட்சணமான பாத்திரத்தில் வைக்கப்பட்டு உள்ளதே'' என்று அவர் தோற்றத்தைப் பற்றி எல்லோர் காதிலும் விழுமாறு பேசினாள் இளவரசி.

இதைக் கேட்டு அறிஞர் சிறிதும் கோபப்படவில்லை. ''இளவரசியாரே! கிடைத்தற்கு அரிய விலை உயர்ந்த மது வகைகளை எதில் வைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''மண் பாத்திரத்தில்தான்'' என்றாள் அவள்.

''ஏழைக் குடிமகன் மண் பாத்திரத்தில் வைத்து இருக்கலாம். எல்லாச் செல்வமும் உடைய தங்கள் அரண்மனையிலுமா அப்படி வைத்திருக்கிறீர்கள்? இனி விலை உயர்ந்த பாத்திரத்தில் மதுவை ஊற்றி வையுங்கள். சில நாட்கள் கழித்து உங்களைச் சந்திக்கிறேன். உங்கள் ஐயத்திற்கு விடை கிடைக்கும்'' என்றார் அறிஞர்.

அரண்மனைக்குச் சென்ற இளவரசி மண் பாத்திரத்தில் இருந்த மதுவை எல்லாம் வெள்ளிப் பாத்திரத்திலும் தங்கப் பாத்திரத்திலும் ஊற்றி வைத்தாள். அவள் ஊற்றி வைத்த மது எல்லாமே ஒரு மாதத்திற்குள் கெட்டுவிட்டது.

அறிஞரை அழைத்த அவள், ''மது கெட்டுப் போனதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

''எப்படி உயர்ந்த மது சாதாரண மண் பாத்திரத்தில் கெடாமல் இருக்கிறதோ அதைப் போல உயர்ந்த அறிவு அவலட்சணமான உருவத்தில் நிலையாக இருக்கும்'' என்று விளக்கினார் அவர்.

இதை மறுத்த இளவரசி, ''அழகுள்ள எத்தனையோ பேர் அறிஞராக இருப்பதைப் பார்த்திருக்கிறேன்'' என்றாள்.

''இருக்கலாம் இளவரசி. அவர்கள் மட்டும் அழகு குறைந்தவர்களாக இருந்திருந்தால் மேலும் அறிவுடையவர் களாக இருந்திருப்பார்கள்'' என்று பதில் சொன்னார் அவர்.

16. உண்பதற்காகத் தந்திரம்

முன்னொரு காலத்தில் அரசன் ஒருவனுடைய அவையில் கோமாளி ஒருவன் இருந்தான். அவனுடைய குறும்புச் செயல்களும் கேலியும் சாதுர்யமான பேச்சும் அரசனுக்கு மிகவும் பிடித்திருந்தன. கோமாளி அளவுக்கு அதிகமாக உண்பதும் அவன் உருவம் நாளுக்கு நாள் மேலும் மேலும் குண்டாகிக் கொண்டு வருவதும்தான் அரசனுக்கு பிடிக்கவில்லை.

தன் அமைச்சர்களை அழைத்த அரசன், ''ஒரு நாளாவது நம் கோமாளிக்கு உண்ண எதையும் தரக் கூடாது. நாளை நம் அரண்மனை விருந்தில் அவனுக்கு நாற்காலி போடாதீர். அன்று மட்டுமாவது அவன் எதையும் உண்ணாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றான்.

''அவன் மிகவும் குண்டாக இருக்கிறான். பட்டினி கிடப்பது நல்லதுதான்'' என்றான் அமைச்சன் ஒருவன்.

மறுமாள் விருந்து தொடங்கியது. தான் அமர்வதற்கு நாற்காலி இல்லை என்பதை அறிந்த கோமாளி ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான். பலவகையான உணவுப்

பொருள்கள் பரிமாறப் பட்டன. தனக்கும் உணவு வரும் என்று காத்திருந்தான் அவன், பரிமாறுபவனின் தட்டி லிருந்து தவறிக் கீழே விழுந்த ரொட்டி ஒன்றை யாருக்கும் தெரியாமல் எடுத்தான் அவன். ஆனால் அரசன் அதைக் கவனித்து விட்டான்.

விருந்து முடிந்தது. கலைநிகழ்ச்சிகள் தொடங்கின.

கோமாளி மெதுவாக ரொட்டியைத் தன் வாயின் அருகே கொண்டு சென்றான்.

அவனை உண்ண விடாமல் தடுக்க நினைத்த அரசன், ''புதிதாக ஒரு குதிரை வைத்திருக்கிறாயே. எங்கு வாங்கினாய்?'' என்று கேட்டான்.

''கொற்கையில் வாங்கினேன்'' என்றான் கோமாளி.

அரசன் கலை நிகழ்ச்சியைக் கவனிக்கத் தொடங் கினான். சிறிது நேரம் ஆயிற்று. கோமாளி மீண்டும் அந்த ரொட்டியை உண்ண முயன்றான். அப்பொழுது அரசன் ''என்ன விலை கொடுத்துக் குதிரையை வாங்கினாய்?'' என்று கேட்டான்.

''இருபது பொற்காசுகள்'' என்று பதில் தந்தான் அவன்.

இப்படி ஒவ்வொரு முறை அவன் உண்ண முயலும் போதும் அரசன் ஏதாவது கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான்.

இரவு நேரம் வந்தது. கலை நிகழ்ச்சியும் முடிந்தது. தன் கையில் இருந்த ரொட்டியைச் சாப்பிட்ட

கோமாளியால் பசி தாங்க முடியவில்லை. தனக்கு உணவு இருக்கும் என்ற எண்ணத்தில் சமையல் அறைக்கு ஓடினான். அரசனின் கட்டளைப்படி அங்கு உணவு ஏதும் இல்லை.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. கோமாளியால் பசியைத் தாங்க முடியவில்லை.

அரசன் தூங்கிக் கொண்டிருந்த அறைக் கதவைத் தட்டினான் கோமாளி.

விழித்த அரசன் கோபத்துடன், "எதற்காகக் கதவைத் தட்டினாய்?" என்று கேட்டான்.

"அரசே! தங்களிடம் தவறுதலாகப் பொய் சொல்லி விட்டேன். நான் குதிரையை வாங்கியது மதுரையில்தான். கொற்கையில் அல்ல. அதைச் சொல்லத்தான் எழுப்பினேன்" என்றான் கோமாளி.

"சரி! சரி! நீ போ. என் தூக்கத்தைக் கெடுக்காதே" என்றான் அரசன்.

சிறிது நேரம் கழித்துக் கோமாளி மீண்டும் கதவைத் தட்டினான். "இப்பொழுது எதற்காக எழுப்பினாய்?" என்று கத்தினான் அரசன்.

"அரசே! நான் அந்தக் குதிரையை இருபது பொற்காசுகளுக்கு வாங்கவில்லை இருபத்தைந்து பொற்காசுகளுக்கு வாங்கினேன், உண்மையைச் சொல்லத் தான் உங்களை எழுப்பினேன்" என்றான் கோமாளி.

அரசனால் கோபத்தை அடக்க முடியவில்லை. ''என்ன திமிர் உனக்கு? நள்ளிரவில் என்னை எழுப்பி ஒன்றுக்கும் உதவாத உன் குதிரையைப் பற்றிக் கதை சொல்கிறாய். இதற்காக உன்னைத் துண்டு துண்டாக வெட்டி நரிகளுக்கும் காக்கைகளுக்கும் போடப் போகிறேன்'' என்று கத்தினான்.

''அரசே! தூக்கத்தில் உங்களை எழுப்பியதற்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறது என்று எனக்குத் தெரியும். நான் சாவதற்கு முன் என் ஒரே ஒரு கடைசி ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அனுமதிப்பீர்களா?'' என்று பணிவாகக் கேட்டான் கோமாளி.

''என்ன உன் கடைசி ஆசை?'' என்று கேட்டான் அரசன்,

''அரசே! வயிறு முட்ட சுவையான உணவுகளை உண்ண வேண்டும். இதுதான் என் கடைசி ஆசை'' என்றான் அவன்.

அரசனுக்குக் கோமாளியின் தந்திரம் புரிந்து விட்டது. அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. நல்ல உணவு வகைகளைக் கோமாளிக்குப் பரிமாறுமாறு வேலையாட்களுக்குக் கட்டளை இட்டான்.

அதன் பிறகு கோமாளி எவ்வளவு உண்டாலும் அரசன் தலையிடுவது இல்லை.

17. பேரனைத் தண்டிக்காமல் தடுக்க

ஓர் ஊரில் நன்கு கற்றறிந்த பெரியவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரே மகன். அந்த மகனுக்கு ஒரு மகன் பிறந்தான்.

பேரனுக்கு பத்து வயதாயிற்று; மிகுந்த சோம்பேறியாக இருந்தான். அவனுக்குக் கல்வி கற்றுத் தரும் பொறுப்பைப் பெரியவரான தாத்தா எடுத்துக் கொண்டார்.

கண்டிப்புக்குப் பெயர் போனவரான அவர் பேரன் சிறு தவறு செய்தாலும் கடுமையாகத் தண்டனை கொடுத்தார். அவ்வப்பொழுது சிறுவனின் தந்தை குறுக்கிட்டு அவனைத் தாத்தாவின் கோபத்திலிருந்து காப்பாற்றுவார்.

ஒருநாள், பெரியவர் தன் மகனை அழைத்து, ,'எதற்காக என் பேரனை நான் அடிக்கிறேன்; உதைக்கிறேன்; கண்டிக்கிறேன் தெரியுமா? அவன் என்னைப் போலப் பேரும் புகழும் பெற வேண்டும் என்பதற்காகத் தான். இனி என் பேரனைத் தண்டிக்கும் போது நீ குறுக்கிட்டால் நான் பொல்லாதவனாகி விடுவேன்'' என்று கோபத்துடன் சொன்னார்.

மறுநாள் அதிகாலை நேரம். வெளியே கடுமையாகப் பனி கொட்டிக் கொண்டிருந்தது. பேரனுக்கு படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் பெரியவர்.

அவன் சரியாகப் படிக்காததால் கோபம் கொண்ட அவர், ''நீ பனியில் நின்று குளிரால் விறைத்துப் போனால் தான் உனக்குப் படிப்பு வரும்'' என்று கத்திவிட்டு அவனை வெளியே குளிரில் நிற்க வைத்துக் கதவைச் சாத்தினார்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த தந்தைக்குத் தன் மகனை எப்படி இந்தத் தண்டனை யிலிருந்து காப்பாற்றுவது என்று புரியவில்லை.

தன் மேல் சட்டையை அவிழ்த்த அவர் கதவைத் திறந்து வெளியே சென்று தன் மகனின் அருகில் நின்று கொண்டார். இருவருமே குளிரால் நடுங்கிக் கொண்டு இருந்தார்கள்.

நடந்ததைப் பார்த்த பெரியவர் தன் மகனிடம் ''பேரன்தான் தவறு செய்தான். தண்டனையை அனுப விக்கக் குளிரில் இருக்கிறான். நீ எதற்காகக் குளிரில் நிற்கிறாய்?'' என்று கேட்டார்.

''தந்தையே! நீங்கள் என் மகனைக் குளிரில் நடுங்க வைத்து அவனைச் சாகடிக்கிறீர். பதிலுக்கு நான் என்ன செய்ய முடியும். உங்கள் மகனைக் குளிரில் நடுங்க வைத்துச் சாகடிக்கிறேன்'' என்று பதில் தந்தார்.

இருவரையும் உள்ளே வரச் சொன்ன பெரியவர் அதன் பிறகு பேரனைக் கடுமையாகத் தண்டிப்பதை விட்டு விட்டார்.

18. விழித்தவர் தூங்கினார்

புகழ் பெற்ற அந்தப் பேச்சாளரை ஒரு மாதம் பக்திச் சொற்பொழிவு செய்ய அந்த ஊருக்கு அழைத்திருந்தனர்.

அவர் பேச்சைக் கேட்க நாள்தோறும் ஏராளமான மக்கள் வந்து கொண்டிருந்தனர்.

முதல் வரிசையில் வழக்கமாக ஒரு முதியவர் அமர்வார். சொற்பொழிவு தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் குறட்டைவிடத் தொடங்குவார்.

நான்கு, ஐந்து நாட்கள் பொறுமையாக இருந்த பேச்சாளரால் அதற்கு மேல் முடியவில்லை. என்ன செய்வது என்று சிந்தித்த அவருக்கு அந்த முதியவருடன் வரும் சிறுவனின் நினைவு வந்தது.

மறுநாள் பேச்சு முடிந்த பின், அந்தச் சிறுவனை மட்டும் தனியே அழைத்தார். "உன் தாத்தாவை இங்கே நீ தூங்காமல் பார்த்துக் கொள். ஒரு நாளைக்கு நான் ஒரு ரூபாய் தருகிறேன்" என்றார்.

சிறுவனும் ஒப்புக் கொண்டான்.

தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் அந்தப் பெரியவர் தூங்கவே இல்லை. திட்டம் வெற்றி பெற்று விட்டது என்று மகிழ்ந்தார் பேச்சாளர்.

மூன்றாவது நாள் வழக்கம் போல, முதல் வரிசையில் அமர்ந்த முதியவர் குறட்டைவிட்டுத் தூங்கத் தொடங்கினார்.

பேச்சு முடிந்ததும் அந்தச் சிறுவனை அழைத்த பேச்சாளர், "நான் உன்னிடம் என்ன சொன்னேன்? நீ என்ன செய்திருக்கிறாய்? உனக்கு எப்படி ஒரு ரூபாய் கிடைக்கும்? இன்று உன் தாத்தா தூங்கி விட்டாரே" என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன், "நான் என்ன செய்வேன்? அவரைத் தூங்க விடாமல் செய்தால் நீங்கள் ஒரு ரூபாய் தருவதாகச் சொன்னீர்கள். தாத்தா அவர் தூங்கும்போது தொந்தரவு செய்யாமல் இருந்தால் ஐந்து ரூபாய் தருவதாகச் சொன்னார். ஒரு ரூபாயைவிட ஐந்து ரூபாய் பெரிது, அதனால்தான் நான் அவரைத் தூங்க விட்டேன்" என்றான்.

பேச்சாளர் வாயடைத்துப் போனார்.

19. யானையிடம் தப்பித்தவன்

காட்டு வழியாக ஒருவன் சென்று கொண்டிருந்தான். திடீரென்று இரண்டு யானைகள் அவனைத் துரத்தத் தொடங்கின.

தப்பிக்க வேறு வழியில்லாத அவன் அருகில் இருந்த மா மரத்தில் ஏறினான். அதிக வலுவும் உயரமும் இல்லாத அந்த மா மரத்தை ஆண் யானை முட்டத் தொடங்கியது. மரம் ஆடியதே தவிர கீழே விழவில்லை.

எப்படியும் மரத்தை கீழே தள்ளி அவனைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தது ஆண் யானை. பெண்

யானையைக் காவலுக்கு வைத்தது. அருகிலிருந்த குளத்திற்குச் சென்று நீர் முகர்ந்து அந்த மரத்தின் வேரில் துதிக்கை வழியாகக் கொட்டியது ஆண் யானை.

மரத்தின் மேலிருந்தவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. 'எப்படியும் வேரில் கொட்டப்படும் நீரினால் மரத்தின் அடிப்பகுதியின் மண்பிடிப்பு இளகி விடும். பிறகு யானை மோதினால் தன்கதி அவ்வளவுதான். இறங்கித் தப்பி ஓடவும் வழி இல்லை. பெண் யானை தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆண் யானை நீர் கொண்டு வர எப்படியும் நேரமாகும். என் செய்வது?' என்று சிந்தித்தான்.

அவனுக்கு நல்ல வழி தோன்றியது.

தான் இருந்த மரத்திலிருந்து ஒரு பழத்தைப் பறித்துக் கீழே இருந்த பெண் யானையிடம் போட்டான். யானை அதை விரும்பிச் சாப்பிட்டது. ஒவ்வொரு பழத்துக்கும் தூரத்தை அதிகமாக்கிக் கொண்டே சென்றான் அவன். பழம் உண்ணும் ஆசையில் பெண் யானையும் மரத்தை வீட்டுச் சிறிது தூரம் சென்றது.

கடைசியாக ஒரு பழத்தை தன்னால் இயன்ற அளவு வெகு தூரத்தில் எறிந்தான். அதை உண்ண யானை அங்கு சென்றதும் மரத்தை விட்டுக் கிடுகிடு என்று இறங்கி ஓடத் தொடங்கினான்.

ஆண் யானை அங்கு இல்லாததால் பெண் யானை அவனைத் துரத்தவில்லை.

20. இறந்தான் என்று சொன்னால் சாவு

ஒரு நாட்டை அரசன் ஆண்டு வந்தான், அவனுக்கு ஒரே மகன். அவன் மீது உயிரையே வைத்திருந்தான் அரசன்.

திடீரென்று அந்த மகன் கடும் நோய்வாய்ப் பட்டான். மருத்துவர்கள் அழைக்கப் பட்டனர். அவன் உடலைச் சோதித்த அவர்கள் இளவரசன் உயிர் பிழைக்க வாய்ப்பே இல்லை என்று உணர்ந்தனர்.

அவர்களில் ஒருவர், "நாங்கள் எங்களால் ஆன முயற்சி எல்லாம் செய்கிறோம். இளவரசரை நோய் கடுமையாகத் தாக்கி இருக்கிறது. உயிர் பிழைப்பது கடினம்தான்" என்று அரசனிடம் பணிவாகச் சொன்னார்.

"நீங்கள் என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது. அவன் உயிர் பிழைக்க வேண்டும். இறந்தான் என்று யாராவது என்னிடம் சொன்னால் நீங்கள் அனைவரும் சாவது உறுதி" என்று கோபமாகச் சொன்னான் அரசன்.

மருத்துவர்கள் இதைக் கேட்டுத் திகைத்தனர். அவர்களால் என்ன செய்ய இயலும்? இரண்டு நாட்களிலேயே இளவரசன் இறந்து விட்டான்.

வழக்கம் போலத் தன் மகனின் உடல்நலனைப் பற்றிக் கேட்க அரசன் வந்தான். எப்படி அரசனிடம் பேசுவது என்று அவர்கள் முடிவு செய்து வைத்திருந்தனர்.

"என் மகன் இப்பொழுது எப்படி இருக்கின்றான்?" என்று வினவினான் அரசன்.

"இரண்டு நாட்களாகச் சிறிதுகூட உண்ணவில்லை. சிறிதுகூட அசையவில்லை" என்றார் மருத்துவர் ஒருவர்.

"கண்ணைத் திறந்தாவது பார்க்கின்றானா"? என்றான் அரசன்.

"கண்ணையும் திறக்கவில்லை. காதும் கேட்க வில்லை" என்றார் இன்னொரு மருத்துவர்.

"சரி! மூச்சு நன்றாக வருகிறதா?" என்று கேட்டான் அரசன்.

"என்னென்று சொல்வது,? நாங்கள் எவ்வளவோ மருந்து கொடுத்தும் பயனில்லை. இளவரசர் மூச்சு விடுவதை நிறுத்திச் சில மணி நேரம் ஆகிறது" என்றார் மற்றொரு மருத்துவர்.

"என்ன என் மகன் இறந்துவிட்டான் என்றா சொல்கிறீர்கள்?" என்று கோபத்துடன் கேட்டான் அரசன்.

"அரசே! நாங்கள் அப்படிச் சொல்லவில்லை. நீங்கள்தான் இளவரசர் இறந்து விட்டார் என்று சொல் கிறீர்கள். நாங்கள் அவர் மூச்சு விடவில்லை என்றுதான் சொன்னோம்" என்று பணிவாகச் சொன்னார் ஒரு மருத்துவர்,

அந்தச் சோக சூழலிலும் அரசனால் மருத்துவர் களின் சாதுர்யமான பேச்சை வியக்காமல் இருக்க முடிய

வில்லை. அவர்களை ஒன்றும் செய்யாமல் அனுப்பி வைத்தான்.

21. வீரம் யாருக்கும் உண்டு!

ஓர் ஊரில் துணி வெளுப்பவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கரியன். ஒருநாள் மாலை நன்கு குடித்து விட்டு வீடு திரும்பினான்.

"தோட்டத்தில் கட்டி வைத்திருந்த கழுதையைக் காணவில்லை'' என்றாள் அவன் மனைவி.

மழை பெய்து கொண்டிருந்த அந்த நேரத்தில் கயிற்றை எடுத்துக்கொண்டு கழுதையைத் தேடிப் புறப்பட்டான் அவன்.

அப்பொழுது புலி ஒன்று குளிரால் நடுங்கியபடி ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தது. குடி மயக்கத்திலிருந்த கரியனுக்கு அந்தப் புலி காணாமல் போன தன் கழுதையைப் போலத் தோன்றியது.

"நீ இங்கே இருக்கிறாயா? உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைவது? நாளைக்கு நீ தூக்கப் போற சுமை உனக்கு நல்ல பாடமாக இருக்கும்'' என்று புலியின் கழுத்தில் கயிற்றைக் கட்டித் தன் வீட்டிற்கு இழுத்து வந்தான்.

நடந்ததைக் கண்டு பயந்து போன புலி அவன் பின்னால் வந்தது. அதைத் தன் வீட்டுத் தோட்டத்தில் கட்டிவிட்டு வீட்டிற்குச் சென்று படுத்தான் அவன்.

பொழுது விடிந்தது. அந்த வழியாக வந்த அரசன், வெறும் கயிற்றால் புலி ஒன்று கட்டப்பட்டு இருப்பதைக் கண்டு வியப்பு அடைந்தான். தூக்கம் கலைந்து வெளியே வந்த கரியனுக்கு உண்மை சிறிது சிறிதாகப் புரிந்தது. ''நீதான் இருந்த புலியை மரத்தில் கட்டினாயா?'' என்று கேட்டான் அரசன்.

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய அவன் ''நான் வீரன் என்றால் யாருமே நம்பவில்லை. அவர்களை நம்ப வைப்பதற்காகத்தான் காட்டிற்குப் போய் வெறுங்கயிற்றால் புலியைக் கட்டி இழுத்து வந்து மரத்தில் கட்டினேன்'' என்று அளந்தான்.

மகிழ்ச்சி அடைந்த அரசன், ''இவ்வளவு வீரம் உடைய யாரையும் என் வாழ்நாளில் பார்த்தது இல்லை. இன்று முதல் நீதான் இந்நாட்டின் படைத் தலைவன்'' என்றான்.

செய்தி அறிந்த மக்கள், ''புலியை அடக்கிய புதிய படைத் தலைவர் வாழ்க! வாழ்க!'' என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

படைத் தலைவன் பொறுப்பை ஏற்ற கரியனுக்குக் குதிரை ஏறத் தெரியாது. அதனால் எங்கு சென்றாலும் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து அதை இழுத்துக் கொண்டே செல்வான்.

இதைப் பார்த்த மக்கள், ''நம் படைத் தலைவர் எவ்வளவு அடக்கமாக எளிமையாக இருக்கிறார்.

குதிரை மேலே ஏறாமல் எப்பொழுதும் நடந்தே செல்கிறார்'' என்று வியந்தார்கள்.

ஆண்டுகள் சில சென்றன. எதிரி நாட்டு அரசன் இந்நாட்டைக் கைப்பற்றப் பெரும் படையுடன் வந்து எல்லையில் பாசறை அமைத்துத் தங்கினான்.

செய்தி அறிந்த அரசன், படைத்தலைவனை அழைத்து, "இந்த இக்கட்டான சூழலில் உம் வீரம்தான் நம் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். எப்பொழுது நம் வீரர்களுடன் எதிரி மீது போர் செய்யப் போகிறீர்?'' என்று கேட்டான்.

"தேவையில்லாமல் தொல்லையில் மாட்டிக் கொண்டோமே. எதிரியிடம் மாட்டினால் நம்மைக் கொன்று விடுவான். இல்லாவிட்டால் இவர்களை ஏமாற்றியதாக எல்லோரும் சேர்ந்து என்னைக் கொன்று விடுவார்கள். என்ன செய்வது?'' என்று சிந்தித்தான் அவன்.

எப்படியோ தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்டு, "அரசே! நான் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்.? எதிரிகளைத் தூசி போல ஊதிவிட மாட்டேனா'' என்று அளந்தான்.

அரசன் மகிழ்ச்சி அடைந்தான்.

மறுநாள், தன் வீரர்களை அழைத்த படைத் தலைவன் தன்னைக் குதிரையோடு சேர்த்து இறுகக் கட்டி அதை விரட்டி விடுமாறு கட்டளை இட்டான். அவர்களும் அப்படியே செய்தனர்.

குதிரை எங்காவது ஓடும். தான் தப்பித்துக் கொள்ளலாம் என்ற அவன் எண்ணத்தில் இடி விழுந்தது, அந்தக் குதிரை எதிரிகள் தங்கியிருந்த பாசறையை நோக்கி ஓடத் தொடங்கியது.

பயந்து போன கரியன் எப்படியாவது குதிரையை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் பக்கத்தில் இருந்த பனை மரத்தை ஒரு கையால் இறுகப் பிடித்தான்.

குதிரை நிற்பதற்குப் பதில் அந்தப் பனை மரம் வேரோடு பிடுங்கப்பட்டு அவன் கையில் வந்தது. அதைக் தூக்கிக் கொண்டே அடுத்த கையால் இன்னொரு பனை மரத்தைப் பிடித்தான். அதுவும் அவன் கையுடன் வந்துவிட்டது.

மிகவும் பயந்து போன அவன் இரண்டு பனை மரங்களையும் தூக்கியபடி "ஐயோ! என்னைக் காப்பாற்றுங்கள்" எனக் கூச்சல் போட்டான்.

சத்தம் வந்த திசையைப் பார்த்த எதிரிப் படை வீரர்கள், "இரண்டு பெரிய பனை மரங்களையும் இரண்டு கைகளாலும் சுழற்றியபடி தங்களைத் தாக்கக் குதிரையின் மேல் அரக்கன் போல் ஒருவன் கூவிக் கொண்டு வருவதைக் கண்டார்கள். கதிகலங்கிய அவர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று ஓட்டம் பிடித்தனர்.

தூரத்திலிருந்து இதைக் கண்ட கரியன் "ஆ! ஊ!" என்று உரக்கக் குரல் எழுப்பினான்.

நீண்ட தூரம் ஓடிய பிறகு குதிரை களைத்து ஓரிடத்தில் நின்றது. பனை மரங்களைக் கீழே போட்ட

அவன் தன் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு குதிரையை நடத்திக் கொண்டே தலைநகர் வந்தான்.

வெற்றிச் செய்தியை முன்னரே அறிந்த நாட்டு மக்கள் அவனைச் சிறப்பாக வரவேற்றனர்.

22. இரண்டு மனைவியைப் பெற்றவன்

ஓர் ஊரில் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு மனைவியர் இருந்தனர். இருவருமே அவன் உள்ளம் மகிழுமாறு நடந்து கொண்டனர்.

ஒருமுறை வெளிநாடு சென்று திரும்பிய அவன் விலை உயர்ந்த இரண்டு முத்து மாலைகளை வாங்கி வந்தான்.

இரண்டு மனைவியரையும் தனித்தனியே சந்தித்த அவன், "உனக்கு மட்டும்தான் முத்து மாலை வாங்கி வந்துள்ளேன். எக்காரணத்தைக் கொண்டும் அடுத்தவளிடம் சொல்லி விடாதே. அதனால் ஏற்படும் குழப்பத்தினால் என் மகிழ்ச்சியே போய்விடும்'' என்று சொல்லி விட்டுக் கொடுத்தான்.

இரண்டு மனைவியருமே தனக்கு மட்டும்தான் முத்து மாலை கிடைத்துள்ளது என்ற எண்ணத்தில் மகிழ்ந்தனர்.

மாதங்கள் சில ஓடின. மகிழ்ச்சியாக இருந்த இரண்டு மனைவியரிடமும் போட்டியும் பொறமையும் தோன்றியது. 'யார் மீது கணவன் அதிக அன்பு வைத்துள்ளான்' என்று அறிய இருவருமே ஆவல் கொண்டனர்.

வீட்டிற்கு வந்த கணவனை இரண்டு பேரும் வரவேற்றனர். "அன்பரே! எங்களில் யார் மீது அதிக அன்பு வைத்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டாள் ஒருத்தி

வம்பில் மாட்டிக் கொண்டோமே என்று நினைத்த வணிகன் "நான் எல்லோரைக் காட்டிலும் உங்கள் இருவர் மீதுதான் அதிக அன்பு வைத்திருக்கிறேன்" என்றான்.

"அதெல்லாம் வேண்டாம். எங்கள் இருவரில் நீங்கள் யார்மீது அதிக அன்பு வைத்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள்" என்று கேட்டாள் இன்னொருத்தி.

"நீங்கள் இருவரும் மனம் வருந்தும்படி நான் எப்பொழுதாவது நடந்து கொண்டுள்ளேனா? எதற்காக வீணான இந்தக் கேள்வி?" என்றான் அவன்.

"சமாளிக்காதீர்கள். எங்கள் இருவரில் உங்களுக்கு மிகவும் பிடித்தவர் யார்? சொல்லியே ஆக வேண்டும்" என்றார்கள் இருவரும் விடாப்பிடியாக.

வேறுவழியில்லை என்று உணர்ந்த வணிகன். மிக மெல்லிய குரலில், "நான் யாருக்கு முத்து மாலையைத் தந்தேனோ அவளே என் அன்புக்கு உரியவள்" என்றான்.

இரண்டு மனைவியரும் வெற்றிப் பெருமிதத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு சென்றனர்.

23. நான் எங்கு செல்வேன்?

ஒரு நாட்டைக் கொடுங்கோல் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் குடிமக்களிடம் வாங்காத வரி இல்லை, செய்யாத கொடுமை இல்லை.

ஏழை உழவன் ஒருவனால் அரசனுக்குச் சேர வேண்டிய வரியைத் தர இயலவில்லை. அவனை வீரர்கள் அரசனிடம் இழுத்து வந்தனர்.

"அரசே! உணவிற்கே வழி இல்லாத என்னால் எப்படி வரி செலுத்த இயலும்?" என்று கெஞ்சினான் அவன்.

"சேர வேண்டிய வரியை செலுத்த வேண்டும். இல்லையேல் இந்த நாட்டைவிட்டே நீ வெளியேற வேண்டும்" என்று கட்டளையிட்டான் அரசன்.

"அரசே! ஏழையாகிய நான் இந்த நாட்டை விட்டு எங்கு செல்வேன்?" என்றான் அவன்.

"அங்க நாட்டிற்குச் செல்" என்றான் அரசன்

"ஐயோ! அங்கு உம்மைவிடக் கொடுங்கோலனான உம் அண்ணன் ஆளுகிறான். நான் அங்கே போக மாட்டேன்" என்றான்.

"அப்படியானால் வங்க நாட்டிற்குச் செல்" என்றான் அரசன்.

"நான் மாட்டேன். உமக்கே கொடுமைகளைக் கற்றுத் தந்த உம் சிற்றப்பன் அல்லவா ஆளுகிறான்" என்றான் உழவன்.

இப்படியே ஒவ்வொரு நாடாக அரசன் சொல்லிக் கொண்டு வர உழவன் மறுத்துக் கொண்டே வந்தான்,

கடுப்படைந்த அரசன், "அப்படியானால் நரகத்திற்குச் சொல்" என்றான்.

"என்னால் முடியாது. உம் முன்னோர்கள் எல்லாம் அங்குதான் இருக்கிறார்கள். அவர்கள் கொடுமையைத் தாங்க இயலாது" என்றான் உழவன்.

24. தோசை காய்க்கும் மரம்

உழவன் ஒருவன் தன் மனைவியோடு வயலில் உழுது கொண்டிருந்தான். கலப்பை எதிலோ மோதிய ஓசை கேட்டது. இருவரும் தோண்டிப் பார்க்க ஒரு குடம் நிறைய பொற்காசுகள் அங்கே இருந்தன.

இருவரும் யாருக்கும் தெரியாமல் அதை எடுத்துக் கொண்டு வந்தனர். தங்கள் வீட்டுத் தோட்டத்தில் புதைத்தனர்.

'தன் மனைவியின் வாய் ஓட்டை வாய். எப்படியும் புதையல் கிடைத்ததைப் பிறர்க்குச் சொல்லிவிடுவாள். பண்ணையாருக்குத் தெரிந்தால் என் நிலத்தில் கிடைத்தது எனக்குத்தான் சொந்தம் என்று பிடுங்கிக் கொள்வார்' என்று சிந்தித்தான் அவன்.

அன்றிரவு. மனைவி தூங்கும் பொழுது அந்தப் புதையலை வேறிடத்தில் மாற்றிப் புதைத்து வைத்தான். பிறகு சமையல் அறைக்குள் நுழைந்து நிறைய தோசைகள் சுட்டான். தோட்டத்தில் இருந்த வேப்ப மரத்தில் எல்லா வற்றையும் கட்டித் தொங்க விட்டான் அவன்.

பிறகு மனைவியைத் தூக்கத்திலிருந்து எழுப்பிய அவன். "அதிசயத்தைப் பார்த்தாயா? நம் தோட்டத்து வேப்ப மரம் தோசைகளாகக் காய்த்துருக்கிறது. நாம் அவற்றைப் பறித்து உண்போம்" என்றான்.

இருவரும் தோசைகளைப் பறித்துச் சாப்பிடத் தொடங்கினர். இப்படித்தான் நான் சிறுவனாக இருந்த

பொழுது ஏராளமான தோசைகள் காய்த்தனவாம். ஊரெல்லாம் சாப்பிட்டு எஞ்சியதைப் பக்கத்து ஊருக்கும் கொடுத்தார்களாம்'' என்றான் கணவன்.

நடந்தை உண்மையென்றே நம்பி விட்டாள் அவள்.

மறுநாள் காலையில் மற்ற பெண்களோடு ஆற்றங் கரைக்குச் சென்ற அவளால் ரகசியத்தை மறைக்க முடியவில்லை. ''யாரிடமும் சொல்லாதீர்கள். மிகவும் ரகசியம்'' என்று சொல்லிவிட்டுப் புதையல் கிடைத்ததையும் அதைப் புதைத்து வைத்திருக்கும் இடத்தையும் கூறினாள்.

அன்று மாலையே பண்ணையார் நான்கு வேலையாட்களுடன் உழவனின் வீட்டிற்கு வந்தார். அவனைப் பார்த்து ''டேய்! புதையல் எங்கே?'' என்று மிரட்டினார்.

''புதையலா எனக்கேதும் தெரியாதே?'' என்றான் அவன்.

''உன் மனைவிதான் இதைச் சொல்லி இருக்கிறாள். இனியும் உண்மையை மறைக்காதே, பிறகு உன் உடலில் உயிர் இருக்காது'' என்றார் கோபத்துடன் அவர்.

''ஐயா! என் மனைவி பக்கத்து வீட்டிற்குப் போயிருக்கிறாள். அவள் வந்ததும் நீங்களே விசாரித்துக் கொள்ளுங்கள்'' என்றான் அவன்.

அப்பொழுதுதான் அவன் மனைவி வீட்டினுள் நுழைந்தாள்.

நடந்ததை அறிந்த அவள், தன் கணவனைக் காப்பாற்ற வேண்டி, ''ஐயா! புதையல் கிடைத்தது உண்மைதான். அதை எங்கள் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து வைத்துள்ளோம்'' என்றாள்.

''என்னடா புதையல் கிடைக்கவில்லை என்று சொன்னாய்'' என்று உறுமினார் பண்ணையார்.

''ஏண்டி நமக்கு எப்பொழுது புதையல் கிடைத்தது?'' என்றான் அவன்,

''ஏன் மறைக்கறீங்க? புதையல் கிடைத்த அன்று இரவு நம் தோட்டத்து வேப்ப மரத்தில் தோசையாகக் காய்த்துத் தொங்கவில்லை. நாம் கூட அதைப் பறித்துச் சாப்பிடவில்லை'' என்றாள் மனைவி.

'''வேப்ப மரத்தில் தோசை காய்ப்பதாவது. என்ன பைத்தியம் போலப் பேசுகின்றாள்?''' என்று நினைத்த பண்ணையார் அவள் சொன்ன இடத்தில் தோண்டுமாறு வேலையாட்களுக்குக் கட்டளை இட்டார். அங்குப் புதையல் இருந்தால்தானே கிடைப்பதற்கு.

''பைத்தியம் போலப் பேசுகின்ற உன் மனைவியின் பேச்சைக் கேட்டு உனக்குத் தொல்லை கொடுத்து விட்டேன். அவளை நல்ல மருத்துவரிடம் காட்டு'' என்று சொல்லிவிட்டு ஏமாற்றத்துடன் சென்றார் பண்ணையார்.

தன் திட்டம் வெற்றி பெற்றதை நினைத்து மகிழ்ச்சி அடைந்தான் அவன்.

25. இசையின் பெருமை

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் இசையில் வல்லுநனாக விளங்கினான். தன் நாட்டிற்கு இசைக் கலைஞர்கள் யார் வந்தாலும் அவர்களை வரவேற்பான். அரண்மனையில் அவர்களைப் பாட வைத்துப் பெரும்பரிசு கொடுத்து அனுப்புவான்.

வருகை தரும் இசைக் கலைஞர்கள் அரசவையில் பாடும்போது அவையில் உள்ளோர் கை தட்டித் தலை அசைத்து 'ஆ அருமை!' என்று குரல் கொடுத்துப் பாராட்டுவார்கள். இதைப் பார்த்த அரசன் தன்னைப் போலவே அவர்களும் இசை நுணுக்கம் அறிந்தவர்கள் என்று பெருமைப் பட்டான்.

ஒரு முறை புகழ் பெற்ற இசைக் கலைஞர் ஒருவர் அந்நாட்டிற்கு வந்தார். அவரை வரவேற்ற அரசன் தன் அவையில் உள்ளோரை அறிமுகம் செய்து வைத்து, "இவர்கள் எல்லோரும் இசை நுணுக்கம் அறிந்தவர்கள். இனிய இசை கேட்பதற்காக என்னைப் போல எதையும் இழக்கத் துணிந்தவர்கள்" என்றான்.

இதைக் கேட்ட இசைக் கலைஞர் "அரசே! நான் தங்களிடம் பாடிப் பரிசு பெறுவதற்காக வரவில்லை. இந்நாட்டில் இசையின் பெருமை உணர்ந்தவர் பலர் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். ஆனால் அவர்கள் அறியாமையினால் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட

ஒருவர்கூட இங்கே இங்கே இருப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை'' என்றார்.

அரசனின் உள்ளத்தில் அருமையான சூழ்ச்சி உருவாயிற்று.

"நாளை இந்த அவையில் நீங்கள் பாடுங்கள். இசை அருமை தெரிந்த பலரை உங்களுக்குக் காட்டுகிறேன்'' என்றான் அரசன்.

மறுநாள் அரசவை கூடிற்று. இசைக் கலைஞர் பாடுவதற்கு அமர்ந்தார்.

அவையோரைப் பார்த்து அரசன், "தான் என்ற ஆணவம் இந்த இசைக் கலைஞருக்கு. இசை அருமை தெரிந்தவர் யாருமே இந்நாட்டில் இல்லையாம். நம் நாட்டிற்கு எவ்வளவு பெரிய அவமானம்? இவர் பாடும் போது யாரும் கை தட்டக் கூடாது. தலையசைக்கக் கூடாது, காலால் தாளம் போடக் கூடாது, பாராட்டக் கூடாது. அவமானத்தால் இவர் கூனிக் குறுக வேண்டும். மீறி யாராவது பாராட்டினால் அவர் தலை உடலில் தங்காது'' என்று கோபத்துடன் சொன்னான்.

பிறகு கலைஞரைப் பார்த்து, "உமக்குத் திறமை இருந்தால் இந்த அவையில் பாராட்டைப் பெறு பார்ப்போம்'' என்றான் அரசன்.

இசைக் கலைஞர் பாடத் தொடங்கினார். அவரின் இனிய குரல் ராகம் தவறாமல் பாடிய பாடல் அந்த அரங்கத்தையே நிறைவித்தது.

அரசனின் ஆணைக்குப் பயந்து எல்லோரும் அச்சடித்த பதுமைகள் போல இருந்தனர். ஆனால்

ஒரே ஒருவனால் மட்டும் சும்மா இருக்க முடியவில்லை. எவ்வளவோ கட்டுப்படுத்தியும் அருமையான இசையைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் ஓங்கியது.

இசைக் கலைஞர் ஒரு பாடலை உச்ச குரலில் ஏற்றினார். இதுவரை கட்டுப்படுத்தி வைத்திருந்த அவன், "ஆ! என்ன பாடல்! என்ன அருமை" என்று கை தட்டிப் பாராட்டினான்.

அவையிலுள்ள எல்லோரும் அவனைப் பரிதாபமாகப் பார்த்தனர். இசைக் கலைஞரும் பாட்டை நிறுத்தினார்.

எழுந்த அரசன் இசைக் கலைஞரைப் பார்த்து. "என் நாட்டில் இசை அருமை தெரிந்தவர் உள்ளார் என்பதை ஒப்புக் கொள்கிறீரா?" என்று கேட்டான்.

"அரசே! தன் உயிரே, போனாலும் பரவாயில்லை; நல்ல இசையைப் பாராட்டிய இவர் இசையருமை தெரிந்தவர்தான்" என்றார் இசைக் கலைஞர்.

"அரசே! தங்களைச் சூழ்ந்துள்ள இந்தக் கூட்டம் எல்லாம் தெரிந்தது போல நடிக்கும் கூட்டம். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அது தங்களுக்கும் தெரியும் என்று காட்டிக்கொண்டு உங்களிடம் சிறப்புப் பெற அலையும் கூட்டம். இதை உணர்த்துவதற்காகத்தான் இப்படிப் பேசினேன்" என்றார்.

மகிழ்ந்த அரசன் இசைக் கலைஞரைப் பாராட்டி அவருக்குப் பரிசுகள் பல அளித்தான்.

26. எங்கும் அசைவதாயில்லை

வணிகன் ஒருவன் முதுமை அடைந்து இறந்து போனான். அவனை எம தூதர்கள் அழைத்துக் கொண்டு சென்றனர்.

வழியில் மூன்று சாலை சந்திப்பு ஒன்று வந்தது. அவ்விடத்தில் சிறிது நின்று சுற்றும் முற்றும் பார்த்த வணிகன், "இது எந்த இடம்? என்னை எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"மூன்று சாலைகளுள் ஒன்று. நாம் பூவுலகத்தில் இருந்து வந்தது. இன்னொன்று சொர்க்கத்திற்குச் செல்வது மற்றொன்று நரகத்திற்குச் செல்வது. எங்கு முதலில் செல்ல வேண்டும் என்று நீதான் முடிவு செய்ய வேண்டும்?" என்று சொன்னான் எம தூதர்களில் ஒருவன்.

'நான் முடிவு செய்வதா? என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டான் வணிகன்.

"நீ சில அறச் செயல்களைச் செய்துள்ளாய். அதற்காகச் சிறிது காலம் சொக்கத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கலப்படமான பொருட்களை விற்று எண்ணற்ற பாவங்களைச் செய்துள்ளாய். அத்ற்காக நீண்ட காலம் நகரத்தில் துன்புற வேண்டும். சொர்க்கமா? நரகமா? எது முதலில்? நீதான் முடிவு செய்ய வேண்டும்" என்றார்கள் எம தூதர்கள்.

அதற்கு வணிகன், "எவ்வளவு அருமையான மூன்று சாலை சந்திப்பு. இங்கு மட்டும் கடை வைத்து

அமர்ந்து விட்டால் அமோகமாய் வணிகம் நடக்கும். எனக்குச் சொர்க்கமும் வேண்டாம். நரகமும் வேண்டாம். நீங்கள் என்ன செய்தாலும் நான் இந்த இடத்தைவிட்டு அசைவதாயில்லை'' என்றான்.

27. அரசன் அறைந்த அறை

பிரெஞ்சுப் பேரரசர் பதின்மூன்றாம் லூயியிடம் அறிவுக் கூர்மை மிக்க ரிச்லு என்பவர் அமைச்சராக இருந்தார்.

அரசர் சொல்கிறாரே என்பதற்காக எதையும் ஒப்புக் கொள்ள மாட்டார். அரசரிடமே எதிர்த்துப் பேசுவார்.

இதனால் கடுப்படைந்த அரசர் எல்லோர் எதிரிலும் அமைச்சரை அவமானப் படுத்த வேண்டும் என்று நினைத்தார்.

அரசவை கூடியது. முதலாவதாக அரசர் அடுத்து ரிச்லு அடுத்தடுத்து அமைச்சர்களும் பிறரும் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

வழக்கம் போல அரசரின் பேச்சில் குறுக்கிட்டார் ரிச்லு. வாய்ப்பை எதிர்பார்த்த அரசர் அவரின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தார்.

எதிர்பாராதது நடந்ததைக் கண்ட ரிச்லு அதிர்ந்து போனார். 'திருப்பி அரசரை அறைய முடியாது. அப்படிச் செய்தால் மறுகணமே உடலில் உயிர் இருக்காது. இந்த இக்கட்டான சூழலைச் சமாளிக்கவில்லை என்றால் இந்த

அவமானம் என் வாழ்நாள் முழுமையும் நிலைத்திருக்கும். என்ன செய்வது' என்று சிந்தித்தார் ஒரு நொடி.

தன் பக்கத்திலிருந்த அமைச்சரை ஓங்கி அறைந்த ரிச்லு, "அரசர் என்னை அறைந்து பக்கத்தில் இருப்பவர்க்குத் தரச் சொன்னார். நீரும் அப்படியே அடுத்தவருக்கு அனுப்பி விடும்" என்றார்.

சிறிது நேரத்திற்குள் அரசர் நீங்கலாக அங்கிருந்த எல்லோரும் பக்கத்தில் இருந்தவரால் ஓங்கி அறையப் பட்டனர்.

ஒரு கண நேரத்திற்குள் நிலைமையைத் தனக்குச் சாதகமாக மாற்றி விட்ட அமைச்சர் ரிச்லுவின் அறிவுக் கூர்மையை அரசரால் பாராட்டாமல் இருக்க இயல வில்லை.

28. எட்டாத வானில் வீடு

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டைக் கொடுங்கோல் அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்.

அறிவு மிக்க இளைஞன் ஒருவன் தன் நாட்டு மக்களிடம் மதிப்பும் மரியாதையும் பெற்று வருவது அரசனுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

அந்த இளைஞனை அரண்மனைக்கு அழைத்த அரசன் "உன்னை எல்லோரும் அறிஞன் என்று சொல்கிறார்கள். உன் அறிவுக் கூர்மைக்கு ஒரு சோதனை. எனக்காக இன்னும் மூன்றே மூன்று நாட்களில் வானத்தில் மாளிகை ஒன்று கட்டித் தர வேண்டும். எத்தனை

ஆட்கள் தேவையானாலும் எவ்வளவு பொருள் வேண்டு மானாலும் அரண்மனையில் வாங்கிக் கொள்ளலாம். நான் சொன்னதை நீ செய்து முடித்து விட்டால் இந்நாட்டிலேயே சீரும் சிறப்புமாக வாழலாம். அப்படி முடியாவிட்டால் உன் தலையை வெட்டி விடுவேன்'' என்றான்.

மூன்றே நாட்களில் கட்டித் தருவதாக அரசனிடம் உறுதி கூறிவிட்டுத் தன் வீடு திரும்பினான் இளைஞன்.

எப்படி மூன்றே நாட்களில் வானத்தில் வீடு கட்டுவது என்று சிந்தித்தான். அருமையான திட்டம் ஒன்று அவன் உள்ளத்தில் தோன்றியது.

வானில் பறக்கக் கூடிய பெரிய பட்டம் ஒன்றைச் செய்தான். அதன் ஒரு முனையில் மணி ஒன்றைக் கட்டினான். பட்டத்தை நீண்ட கயிற்றுடன் இணைத்தான். மெல்ல மெல்ல அதை வானில் பறக்க விட்டான். பட்டமும் சிறிது சிறிதாக மேலே சென்று அதிக உயரத்திற்குச் சென்றது. அதை இணைத்திருந்த கயிற்றை மரத்தில் கட்டினான். கீழிருந்து பார்ப்பவர்களுக்குப் பட்டம் வானில் சிறு புள்ளியாகத்தான் தெரிந்தது. பட்டம் காற்றில் அசையும் போதெல்லாம் அதில் கட்டியிருந்த மணி கணீரென்று ஒலித்தது.

மறுநாள் வானில் மணியோசை கேட்டு எல்லோரும் வெளியே வந்தனர். அரசனும் என்னவோ ஏதோவென்று வெளியே வந்தான்.

இளைஞனிடம், ''என்ன ஓசை அது?'' என்று கேட்டான் அரசன்.

'அரசே! தாங்கள் கட்டளையிட்டபடி வானில் மாளிகை கட்டும் வேலை நடக்கிறது. இதோ இங்கே உள்ள செங்கற்களும் மரங்களும் கட்டடம் கட்டுபவர்களுக்குத் தேவையாம். மணி அடித்து 'சீக்கிரம் அனுப்பி வையுங்கள்' என்று சொல்கிறார்கள். அதுதான் நாம் கேட்கும் மணியோசை.

எப்படியாவது, யார் மூலமாவது இந்தக் கயிற்றின் வழியே பொருளை நீங்கள் அனுப்பி வையுங்கள். இன்று மாலைக்குள் வானில் கட்டடம் தயாராகி விடும்'' என்றான் இளைஞன்.

அரசன் என்ன செய்வான். அதன் பிறகு இளைஞனின் வழிக்கே வருவதில்லை.

29. மருமகளை வெறுக்கும் மாமியார்

இளைஞன் ஒருவன் சோகமாகக் காட்டு வழியே சென்று கொண்டிருந்தான். அவனைச் சந்தித்த பெரியவர் ஒருவர், ''உனக்கு என்ன நடந்தது? ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டார்.

''ஐயா! நான் திருமணம் செய்து கொண்ட சில நாட்களுக்குள் என் மனைவியின் மீது என் அம்மா இல்லாததும் பொல்லாததுமாகக் குற்றம் சாட்டுகிறார். கொடுமைப்படுத்துகிறார். என் மனைவி எவ்வளவு பணிவாக நடந்து கொண்டாலும் பொல்லாதவளான என் அம்மா எப்படியும் வம்புக்கு இழுத்து விடுகிறாள். நான் மனைவிக்கு ஆதரவாக இரண்டு சொற்கள் சொல்லி

விட்டால் போதும். ஊராரை எல்லாம் கூட்டி நானும் என் மனைவியும் சேர்ந்து அவளைக் கொடுமைப் படுத்துவதாக ஒப்பாரி வைப்பாள்.

ஊராரும் அவள் பேச்சை நம்பிப் ‘பெற்ற மனம் நோகாமல் நடந்து கொள். பெண்டாட்டி பேச்சைக் கேட்டு ஆடாதே’ என்று என்னைத்தான் கண்டித்தார்கள். நான் திருமணம் செய்த இரண்டு பெண்களும் என் தாயின் கொடுமை தாங்காமல், எங்கோ ஓடிவிட்டனர். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை'' என்று தன் கதையைச் சொன்னான் அவன்.

‘‘கவலைப்படாதே! நான் சொல்கிறபடி செய். உன் தாயும் திருந்துவாள். ஊராரும் உண்மை உணர்வார்கள்'' என்று அவனுக்கு அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தார் அவர்.

தன் ஊர் திரும்பிய இளைஞன் ஊரில் உள்ள பெரியவர்களை எல்லாம் அழைத்தான்.

‘‘என் மனைவிக்கும் என் தாயாருக்கும் ஏனோ ஒத்து வருவது இல்லை. ஏற்கனவே, என் இரண்டு மனைவியரும் ஓடி விட்டனர். இனியும் இப்படி நடக்க வேண்டாம். நான் புதிதாக மணம் செய்து கொண்டு வரும் பெண்ணை என் அம்மா பார்க்கவே வேண்டாம். இருவரும் தனித்தனி வீட்டில் இருக்கட்டும். நானும் மகிழ்ச்சியாக இருப்பேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

‘‘நல்ல திட்டம். அப்படியே நடந்து கொள். மனைவியால் உன் தாய்க்கு எந்தத் தொல்லையும்

வரக் கூடாது, உன் தாய் அந்த வீட்டிற்குப் போக மாட்டாள்'' என்றார் ஒரு பெரியவர்.

''நான் ஏன் என் மருமகள் வம்புக்குப் போகிறேன். இருவரும் மகிழ்ச்சியாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்'' என்றாள் தாய்.

தனியே இருந்த அந்த வீட்டிற்குள் திட்டப்படி பொம்மை ஒன்றைக் கொண்டு வந்து வைத்தான் அவன். வெளியே செல்லும் போது வீட்டைப் பூட்டி விட்டுச் சென்றான்.

நாட்கள் ஓடின. மருகமளைப் பார்த்து அவளோடு சண்டை போட முடியவில்லையே என்று தவித்தாள் தாய்.

மகன் வீட்டில் இல்லாத நேரமாகப் பார்த்து ஒரு கல்லை எடுத்துத் தன் தலையில் ஓங்கி அடித்துக் கொண்டாள். தலையிலிருந்து குருதி கொட்டத் தொடங்கியது.

''ஐயோ! என் மருமகள் எந்தக் காரணமும் இல்லாமல் என்னை இப்படி அடித்துப் போட்டு விட்டுப் போய் விட்டாளே. கேட்பதற்கு இந்த ஊரில் பெரியவர்கள் யாரும் இல்லையா?'' என்று ஒப்பாரி வைத்து அழுது புலம்பினாள்.

ஊரார் எல்லாம் அங்கே கூடி விட்டனர். வெளியே சென்றிருந்த மகனும் அப்பொழுதுதான் திரும்பினான்.

“ஏம்பா, உன் பெண்டாட்டி இப்படி உங்க அம்மாவை அடிச்சிருக்காளே, நீ கேட்கக் கூடாதா?” என்று கேட்டார் ஒரு பெரியவர்.

“என் மனைவி கண்டிப்பாக என் தாயை அடித்து இருக்க மாட்டாள். எங்கம்மா தானே கல்லால் அடித்துக் கொண்டு இப்படி ஒப்பாரி வைக்கிறாள்” என்றான் அவன்.

“புதுசா வந்த மருமகள் எப்படி சொக்குப் பொடி போட்டிருக்கிறாள் பார்த்தீர்களா?” என்றாள் தாய்.

“எல்லோரும் என்னுடன் வாருங்கள். என் மனைவி இருக்கும் வீட்டிற்குள் போனால் உங்களுக்கே உண்மை தெரிந்து விடும்” என்றான் அவன்.

அவர்களுடன் சென்ற அவன் பூட்டியிருந்த வீட்டுக் கதவைத் திறந்தான். உள்ளே ஒரு பொம்மை இருந்தது. எல்லோரும் வியப்பு அடைந்தனர்.

“நான் புதிதாக யாரையும் திருமணம் செய்து கொள்ள வில்லை. வருகின்ற மருமகளிடம் எல்லாம் என் அம்மா வீணாகச் சண்டை போடுகின்றார். அதுதான் உண்மை. ஆனால் நான் சொல்வதை நீங்கள் யாரும் நம்பத் தயாராக இல்லை. அதனால்தான் இப்படி ஒரு நாடகம் நடித்தேன்” என்று நடந்ததை விளக்கினான் அவன்.

‘மருமகள் நன்றாக மாட்டிக் கொண்டாள். திட்டித் தீர்த்து விடலாம்’ என்று நினைத்து வந்த அவன் தாய் நடந்ததைப் பார்த்து அவமானத்தால் தலை கவிழ்ந்தாள்.

30. அரசியல் அறிவு

அரசியல் தலைவர் ஒருவருடன் எப்பொழுதும் இருந்து வந்தான் இளைஞன் ஒருவன். ஐந்தாண்டுகள் ஆயிற்று.

ஒருநாள், தலைவரிடம் அவன் "ஐயா! நான் உங்களிடமிருந்து அரசியல் சூழ்ச்சி, ஏமாற்றுத்தனம், சூழ்நிலைக்கு ஏற்ப எப்படி நடந்து கொள்வது என்பதை எல்லாம் கற்று விட்டதாக நினைக்கிறேன். இனி நானே தனித்து அரசியலில் ஈடுபடலாமா? உங்கள் எண்ணம் என்ன?" என்று கேட்டான்.

"நீ அரசியலில் தேர்ச்சி பெற்று விட்டாய என்பதை அறிய உனக்கு ஒரு சோதனை வைக்கிறேன். நீ அதில் வெற்றி பெற்றால் தனித்தே அரசியலில் இறங்கலாம். இல்லாவிட்டால் மேலும் சில ஆண்டுகள் இங்கேயே இருக்க வேண்டும்" என்றார் தலைவர்.

"என்ன சோதனை?" என்று ஆர்வத்துடன் கேட்டான் அவன்.

"பூனை ஒன்று மிளகாய்ப் பொடியைச் சாப்பிட வேண்டும். நீ அதற்கு என்ன செய்வாய்?" என்று கேட்டார் தலைவர்.

"இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கட்டாயப் படுத்திப் பூனையின் வாயைத் திறந்து மிளகாய்ப் பொடியை அதற்குள் திணிப்பது. இன்னொன்று பூனை விரும்பி உண்ணும் இறைச்சிக்குள் மிளகாய்ப் பொடியை மறைத்து வைத்துப் பூனைக்குத் தருவது" என்றான் அவன்.

இதைக் கேட்ட தலைவர் "அரசியலில் ஈடுபடு பவர்க்கு இந்த இரண்டுமே தவறான வழிமுறைகள் ஆகும். முதலாவது வழி கட்டாயப் படுத்துவது ஆகும். மக்கள் ஆட்சியில் நாம் யாரையும் கட்டாயப் படுத்தக் கூடாது. இரண்டாவது வழியோ ஏமாற்றுவது ஆகும். முதலாவது வழியை விட இது பெருந்தவறு'' என்றார் தலைவர்.

குழப்பம் அடைந்த அவன், "அப்படியானால் என்னதான் செய்வது? நீங்களே சொல்லுங்கள்'' என்றான்.

அதற்குத் தலைவர், "என் வழி மிகவும் எளிமை ஆனது. பூனையின் வாலில் மிளகாய்ப் பொடியைத் தடவி விடுவேன். அதனால் எரிச்சல் எடுக்கும். வேறு வழியின்றி வாலை நாவால் நக்கும். வாலில் உள்ள மிளகாய்ப் பொடி அதன் வயிற்றுக்குள் சென்று விடும். பூனை மிளகாய்ப் பொடியை விரும்பிச் சாப்பிட்ட தாகவும் ஆகும். நம் மீது யாரும் குறை சொல்ல முடியாது'' என்றார்.

"ஐயா! நான் இன்னும் கற்க வேண்டியது உள்ளது. உங்கள் அரசியல் அறிவிற்கு அளவே இல்லை'' என்றான் இளைஞன்.

31. சொன்ன சொல் தவறாதவன்

ஒரு ஊருக்கு வந்த இளைஞன் ஒருவன், "என்னைப் போல் அருள் உள்ளம் கொண்டவர் யாருமில்லை. வரும் முழுவுநிலவு நாளன்று என்

உடலில் உள்ள ரத்தத்தை இவ்வூர்க் கொசுக்களுக்குத் தரப் போகிறேன். கொசுக்கள் மிகுதியாக உள்ள ஊர்ப் பொது மன்றத்தில் அன்று அமரப் போகிறேன். கொசுக்கள் என்னைக் கடித்தால் அவற்றை விரட்டப் போவதில்லை'' என்று எல்லோரிடமும் சொன்னான்.

அவன் பேச்சை நம்பிய ஊர் மக்கள் அவனுக்கு நாள்தோறும் விருந்து வைத்தனர்.

முழுநிலவு நாளும் வந்தது. என்ன நடக்கப் போகின்றது என்பதை அறிய ஊர் மக்கள் எல்லோரும் கொசுக்கடியிலிருந்து தப்ப போர்வை போர்த்தபடி அங்கு வந்தனர்.

இடுப்பில் மட்டும் கால்சட்டையை அணிந்து இருந்த அந்த இளைஞன் மன்றத்தின் நடுவில் அமர்ந்தான். கொசுக்கள் அவனை மொய்க்கத் தொடங்கின. சிறிது நேரம் கொசுக்கடியைப் பொறுத்து இருந்த அவனால் அதற்கு மேல் முடியவில்லை.

இரண்டு கைகளையும் வீசித் தன்னைக் கடிக்க வந்த கொசுக்களை விரட்டத் தொடங்கினான்.

இதைப் பார்தத ஊர்ப் பெரியவர் ஒருவர், ''என்ன தம்பி! சிறிது நேரம் கூட உன்னால் கொசுக் கடியைத் தாங்க முடியவில்லை. இப்படிக் கைகளை வீசிக் கொசுக்களை விரட்டுகிறாயே. நீயா ரத்தத்தைக் கொசுக்களுக்குத் தருகின்றவன்?'' என்று கேலியாகக் கேட்டார்.

''ஐயா! நான் சொன்ன சொல்லிலிருந்து சிறிது கூட மாறவில்லை, கொசுக்களுக்கு ரத்தம் தருவதாகச்

சொன்னேன். அப்படியே எல்லாவற்றுக்கும் தந்தேன், என் ரத்தத்தைக் குடித்த கொசுக்களில் சில மீண்டும் ரத்தம் குடிக்க வருகின்றன. அவற்றைத்தான் விரட்டுகிறேன். என் ரத்தம் குடிக்காத கொசுக்கள் ஏதேனும் இருந்தால் பிடித்துக் கொண்டு வாருங்கள் உங்களால் முடியாது. ஏனென்றால் அப்படிப்பட்ட கொசுக்களே இங்கு கிடையாது. நான் சொன்ன சொல்லை நிறைவேற்றி விட்டேன். இனி இங்கிருந்து கிளம்புகிறேன்'' என்றான் அவன்.

இதைக் கேட்டு அங்கிருந்த எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

32. பேசினால் செல்வம்

ஒரு நாட்டில் அறிவு நிரம்பிய ஏழை ஒருவன் இருந்தான். 'என்ன செய்தால் பெரும் செல்வம் சேர்க்கலாம்' என்று நினைத்த அவனுக்கு அருமையான திட்டம் ஒன்று தோன்றியது.

மிக ஆடம்பரமாக உடை அணிந்து கொண்டு அரசவைக்குச் சென்றான். ''அரசர் பெருமானே! தங்களிடம் தனியே சில மணித் துளிகள் பேச வேண்டும்'! என்று வேண்டினான் அவன்.

அரியணையை விட்டு இறங்கிய அரசர், ''என்ன சொல்ல வேண்டும் சொல்'' என்று கேட்டார்.

''அரசே! நாள்தோறும் தங்களுடன் தனியே இது போல் பேச விரும்புகிறேன். அதற்காக ஒவ்வொரு

நாளும் நூறு பொற்காசுகள் தங்களுக்குத் தருகிறேன்'' என்றான் அவன்.

விலை மதிப்பான அவன் ஆடைகளைக் கண்ட அரசன், 'இவனிடம் தனியே பேசுவதால் நமக்கு என்ன இழப்பு? அரண்மனைக்கு நாள்தோறும் நூறு பொற்காசுகள் வேறு கிடைக்கிறது' என்று நினைத்தான். "சரி! நாள் தோறும் உன்னோடு தனியே பேசுகிறேன்'' என்றான் அரசன்.

மறுநாள் அரசவைக்கு வந்த அவன் அரசனோடு பேசும் போது முதல் அமைச்சரைப் பரிதாபமாகப் பார்த்த படி அரசனிடம் பேசினான்.

இதைப் பார்த்ததும் முதலமைச்சருக்குத் திக்கென்றது. தனியே அவனை அழைத்து, "நீயும் அரசரும் என்னைப் பற்றி என்ன பேசிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டார்.

தன் திட்டம் வெற்றி பெற்றதை நினைத்து மகிழ்ந்த அவன், "நீங்கள் அரசைக் கவிழ்க்க சதி செய்வதாக அரசர் சந்தேகப் படுகிறார். நான் அப்படி எல்லாம் இருக்காது என்று உங்களை பற்றி உயர்வாகச் சொல்லி இருக்கிறேன். இது குறித்து என்னை மேலும் விசாரிக்கும் படிச் சொல்லி இருக்கின்றார், போகிற போக்கைப் பார்த்தால் உங்கள் தலை தப்புவது கடினம்தான்'' என்றான் அவன்.

பயந்து போன முதலமைச்சர் ஆயிரம் பொற்காசு களை அவனிடம் தந்து. "அரசருக்கு வேண்டிய நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வேண்டினார்.

பணத்தைப் பெற்றுக் கொண்ட அவன் "கவலைப் படாதீர்கள், உங்களுக்கு எந்தத் தொல்லையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான்,

அடுத்த நாள் அரசனோடு பேசிக்கொண்டு இருக்கையில் படைத்தலைவரைப் பரிதாபமாகப் பார்த்த படிப் பேசினான்.

படைத்தலைவர் ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்து அரசரின் கோபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினார்.

இப்படியே அரசவையிலிருந்த ஒவ்வொரு ஆளையும், ஒவ்வொரு நாள் பார்த்தபடி அரசனிடம் பேசினான் அவன்.

நாள்தோறும் அவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் கிடைத்தன.

இரண்டு மாதங்கள் கழிந்தன.

"எப்படி உன்னால் நாள்தோறும் நூறு பொற்காசுகள் என்னிடம் தர முடிகிறது?" என்று கேட்டான் அரசன்.

நடந்த உண்மைகள் எல்லாவற்றையும் அரசனிடம் சொன்னான் அவன்.

அறிவுக் கூர்மையை மெச்சிய அரசன் அவனைத் தன் அமைச்சன் ஆக்கினான்.

பெரியவர்களும் விரும்பிப் படிக்கும் பேராசிரியர் எ. சோதியின் அருமையான சிறுவர் நூல்கள்

அறிவுக் கூர்மைக்குப் புதிர்கள் வரிசை

1.	புதிர்க் கதைகள்	[6-ம் பதிப்பு]	12–00
2.	தத்துவப் புதிர்க் கதைகள்	[5-ம் பதிப்பு]	12–00
3.	புகழ்பெற்ற புதிர்க் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
4.	கம்யூட்டரை மடக்க ஒரு கேள்வி! (புதிர்க் கதைகள்)	[4-ம் பதிப்பு]	12–00
5.	மேலும் சில புதிர் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
6.	இன்னும் சில புதிர்க் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
7.	புதிர்க் கணக்குகள்	[5-ம் பதிப்பு]	12–00
8.	கணக்குப் புதிர்கள்	[6-ம் பதிப்பு]	12–00
9.	விடுகதைகள் – புதிர்கள் 250	[1-ம் பதிப்பு]	12–00

நன்னெறிக் கதைகள் வரிசை

10.	சின்னச் சின்ன நன்னெறிக் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
11.	நன்னெறிக் கதைகள் 60	[4-ம் பதிப்பு]	12–00
12.	நன்னெறிக் கதைகள் 50	[3-ம் பதிப்பு]	12–00
13.	நன்னெறிக் கதைகள் 80	[5-ம் பதிப்பு[	20–00
14.	100 நன்னெறிக் கதைகள்	[1-ம் பதிப்பு]	20–00
15.	150 நன்னெறிக் கதைகள்	[1-ம் பதிப்பு]	30–00

கேள்வி! பதில்!

16.	நல்ல கேள்வி! நல்ல பதில்!	[4-ம் பதிப்பு]	12–00

சிந்திக்க – சிரித்து மகிழ பொழுது போக்க – கதைகள் வரிசை

17.	கெட்டிக்காரன் கதைகள்	[5-ம் பதிப்பு]	12–00
18.	சாமர்த்திய கதைகள்	[5-ம் பதிப்பு]	12–00
19.	சாமர்த்திய கதைகள் II	[2-ம் பதிப்பு]	12–00
20.	சாமர்த்திய கதைகள் III	[2-ம் பதிப்பு]	12–00
21.	சாமர்த்திய கதைகள் IV	[1-ம் பதிப்பு]	12–00
22.	சாமர்த்திய கதைகள் V	[1-ம் பதிப்பு]	12–00
23.	சாமர்த்திய நரி (நரிக் கதைகள்)	[1-ம் பதிப்பு]	10–00
24.	மூடன் மட்டி மடையன் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
25.	முட்டாள் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00

26.	முட்டாள் கதைகள் II	[4-ம் பதிப்பு]	12–00
27.	முட்டாள் கதைகள் III	[2-ம் பதிப்பு]	12–00
28.	முட்டாள் கதைகள் IV	[2-ம் பதிப்பு]	12–00
29.	புகழ் பெற்ற மந்திரக் கதைகள்	[1-ம் பதிப்பு]	20–00
30.	சிரித்து மகிழ வேடிக்கைக் கதைகள்	[1-ம் பதிப்பு]	20–00
31.	கஞ்சன் கருமி கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00

சிறுவர் புதினங்கள்

32.	காட்டுக்குள் புரட்சி	[1-ம் பதிப்பு]	12–00
33.	கெட்டிக்கார வேலன்	[1-ம் பதிப்பு]	15–00

சிறுவர் நாடகம்

34.	சிலேடை சின்னசாமி (நகைச்சுவை நாடகங்கள்)	[3-ம் பதிப்பு]	15–00

கதைகள் வழி அறிவியல்

35.	கதை கதையாம் காரணமாம்	[3-ம் பதிப்பு]	10–00

புகழ் பெற்ற கதைகள் வரிசை

36.	முல்லா கதைகள்	[3-ம் பதிப்பு]	10–00
37.	தெனாலிராமன் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
38.	அப்பாஜி – பீர்பால் கதைகள்	[4-ம் பதிப்பு]	12–00
39.	மரியாதைராமன் கதைகள்	[2-ம் பதிப்பு]	10–00
40.	பரமார்த்தகுரு கதைகள்	[2-ம் பதிப்பு]	10–00
41.	குழந்தைகளுக்கு ஈசாப் நீதிக் கதைகள்	[2-ம் பதிப்பு]	25–00

சிரித்து மகிழ ஜோக்ஸ் வரிசை

42.	சிரிக்க சிந்திக்க சிலேடைகள்	[5-ம் பதிப்பு]	10–00
43.	ஆசிரியர் – மாணவர் & பல நாட்டவர் நகைச்சுவை	[4-ம் பதிப்பு]	10–00
44.	கருமி மறதி சிக்கல் ஜோக்ஸ்	[3–ம் பதிப்பு]	7–00
45.	முட்டாள் ஜோக்ஸ்	[3-ம் பதிப்பு]	7–00
46.	முட்டாள் ஜோக்ஸ் II	[3-ம் பதிப்பு]	7–00
47.	முட்டாள் ஜோக்ஸ் III	[1-ம் பதிப்பு]	7–00
48.	கெட்டிக்காரன் ஜோக்ஸ்	[3-ம் பதிப்பு]	7–00
49.	கெட்டிக்காரன் ஜோக்ஸ் II	[1-ம் பதிப்பு]	7–00
50.	புகழ் பெற்ற ஜோக்ஸ்	[2-ம் பதிப்பு]	7–00
51.	புகழ் பெற்ற ஜோக்ஸ் II	[1-ம் பதிப்பு]	7–00

விலை மாற்றத்திற்குரியது.


சாமர்த்தியக் கதைகள்
பேராசிரியர்
எ. சோதி